அரங்கம் இதழ் 50

# அரங்கம் செய்திகள்


தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் வெள்ளி, பெப்ரவரி 08, 2019. இதழ் - 50




071 399 909 1

உங்கள் சிறு விளம்பரங்கள்கூட எமது பணிக்கு பேருதவியாக இருக்கும்.

## எமது கல்வியை முஸ்லிம்கள் பறிக்கவில்லை

பக்கம் - 06



## அரங்கத்தில் 'படுவான்திசை' கொடுத்த ஒளி

மட்டக்களப்பில் இருந்தும் தினசரிப்பத்திரிகை வெளியாகிய காலமொன்று இருந்தது

பக்கம் - 03



## ஆளுனர் செலவைச் சிக்கனப்படுத்தி கிழக்கின் தந்தையை இழந்த சிறாருக்கு உதவுவேன்' - ஹிஸ்புல்லாஹ்

பக்கம் - 02



# ராஜபக்ஷ இனவாதமாகப் பேசிக் குழப்புகிறார்' - சம்பந்தர்

--- அமிர்தஸன் ---

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தீர்வுத் திட்டத்திற்குப் பயந்தே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் பேச்சுவார்த்தை மேசையில் இருந்து விலகியதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கத்துடன் இணைந்து பல சுற்றுப் பேச்சுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றியிருந்தது. மிகவும் நேர்மையாகவும் நிதானத்தோடும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்தையில் கலந்துகொண்டது.

ஆனால் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் அரசியல் தீர்வு தொடர்பான தமது விதப்புரைகளுக்கு பதில் கூறத் தயங்கியது என்றும் சம்பந்தன் கூறினார்.

தமது ஆட்சியின்போது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சி தோல்வியடைந்தமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ச குற்றம்சாட்டியிருந்தார்.

தமிழ்ப் பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள் ஆகியவற்றின் ஆசிரியர்கள், செய்தியாசிரியர்கள் ஆகியோரை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து பேசியபோது இவ்வாறு அவர் கூறியிருந்தார்.

அதற்குப் பதிலளித்தபோதே சம்பந்தன் இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ச்சி... (பக்கம் -06 )

# அசைகிறது மரங்கள் "அரங்கம்" எனும் காற்றால்

**பேராசிரியர் சி.மௌனகுரு**

மட்டக்களப்பின் பிரதான அடையாளங்களில் ஒன்று கூத்து., கூத்தாடுமிடம் இங்கு கூத்துக் களரி என அழைக்கப் படுகிறது. இன்று சில இடங்களில் இக்கூத்துக்களரி கூத்தரங்கம் எனவும் அழைக்கப்படுகிறது. அரங்கம் எனும் இப்பெயரைத் தமது பத்திரிகைக்குச் சூட்டியதன் மூலம் மட்டக்களப்பின் அடையாளத்தையே சீவகன் தன் பத்திரிகைக்குச் சூட்டினார் என நாம் கொள்ளலாம். .அப்படியாயின் களரி என வைத்திருக்கலாமே? என வினவுவோருக்கு "அரங்கம்" எனும் இச் சொல் பழமையான களரியையும் நவீனமான அரங்கையும் இணைக்கும் பொதுச் சொல்லாகையினால் பழமையினடியாக மட்டக்களப்பு மக்கள் நவீனம் நோக்கிச் செல்ல வேண்டும் என்பதற்காகவே அரங்கம் எனப்பெயர் சூட்டினர் என நாம் பதில் கூறி அமைதி காணலாம்.

அரங்கிலோ பல்வேறு ஆற்றுகைகள் நடைபெறும், சீவகனின் இந்த அரங்கிலும் வாரம்தோறும் பல ஆற்றுகைகளைக் கண்டு மகிழ்கிறோம். அரசியல், இலக்கியம், சமூகவியல், நாட்டாரியல், விஞ்ஞானம், உளவியல், சமயம் விளையாட்டு விமர்சனம் என அவை பலவகை. அரங்கத்தின் சிறப்பு அது.

அதன் இன்னொரு சிறப்பு இத்துறைகளில் பாண்டித்திய மானவர்களை தேடிக்கண்டு வளைத்துப்பிடித்தது எழுத வைப்பது மாத்திரமன்றி புதியவர்களையும் கண்டு பிடித்து அவர்களை ஊக்குவிப்பதுதான்.

அதன் மற்றுமோர் சிறப்பு எளிமையான இலகுவான நடையில் அவர்களை எழுத வைப்பது, மக்களுக்குப் புரியவேண்டும் அல்லவா?

அதன் அடுத்த சிறப்பு வாரம்தோறும் வெள்ளியன்று டணார் என அது கணணியிலும் எம் கைகளிலும் வந்து விடுவது, இலவசமாக விநியோகிக்கப்படுவது.

இதற்கும் மேலால் "அரங்கம்" ஆவணப்படம் தயாரிக்கிறது. தனது காரியாலய மண்டபங்களில் இலக்கியக்கூட்டங்கள்

தொடர்ச்சி... (பக்கம் -15 )





ஊழலை ஒழிப்போம்!

அதற்கு எதிராக குரல்கொடுப்போம்

தமிழிலும் இலவச சட்ட ஆலோசனை பெற அழையுங்கள்

011 2 501 503

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA

a nation that upholds integrity

நேர்மையின் புகலிடம்

இல: 5/1, எலிபேங்க் வீதி, கொழும்பு - 05

Email: help@tisrilanka.org Web: www.tisrilanka.org

மாத்தறை - 041 22 33 522 - வவுனியா - 024 222 76 76



## ஆளுனர் செலவைச் சிக்கனப்படுத்தி கிழக்கின் தந்தையை இழந்த சிறாருக்கு உதவுவேன்' - ஹிஸ்புல்லாஹ்



ஒரு ஆளுனராக எனது தேவைகளைச் சிக்கனப்படுத்தி அந்தப் பணத்தை கிழக்கின் ஏழை மாணவர்களுக்கு உதவப்போகிறேன்' என்று கிழக்கு மாகாண ஆளுனர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கூறியுள்ளார்.

'ஒரு ஆளுனருக்கு என்று ஒரு பொது ஒதுக்கீடு உள்ளது, ஆனால், எனக்கு அவ்வளவு பணம் தேவையில்லை, அதனை சிக்கனப்படுத்தி, ஏழை மாணவர்களுக்கு நான் உதவப் போகிறேன்' என்று எமது செய்தியாளரிடம் ஹிஸ்புல்லாஹ் கூறினார்.

கிழக்கு மாகாண ஆளுநருடைய மாளிகையினை பராமரிப்பு செய்வதற்காக ஒவ்வொரு வருடமும் 20 மில்லியன் ரூபா நிதியை கிழக்கு மாகாண சபை ஒதுக்கீடு செய்து வருகின்றது.

உடனடியாக இந்த நிதியை நிறுத்தி, அதனை கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற தந்தையை இழந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வழங்க தீர்மானித்துள்ளதாக அறிவித்திருந்தார்.

இதுபற்றி அரங்கம் செய்தியாளர் அவரிடம் மேலதிக விபரங்களை கேட்டபோதே அவர் தனது செலவுகளைச் சிக்கனப்படுத்தி தந்தையை இழந்த குழந்தைகளுக்கு உதவும் திட்டத்தைக் கூறினார்.

இது தொடர்பில் நேற்று காலை கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பேரில் நிதி அமைச்சு, திட்டமிடல் அமைச்சு,கல்வி அமைச்சு சமூக சேவைகள் அமைச்சுக்கள் உட்பட அதிகாரிகளுடனான கலந்துரையாடலையடுத்து, கிழக்கு மாகாணத்திலே ஐந்தாம் ஆண்டுவரை பாடசாலைகளில் கல்வி கற்கின்ற தந்தையை இழந்த மாணவர்களுக்கு, ஒரு மாணவருக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்குமாறு ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார் .

கிழக்கு மாகாணத்தில் யுத்தம், இயற்கை அனர்த்தம் போன்ற காரணங்களால் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தங்களுடைய தந்தையை இழந்து, வருமானமற்று, இருக்கின்ற நிலை ஆளுநர் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அண்மையில் வாகரைப் பிரதேசத்தில் சிறிய மாணவர்கள் நிலக்கடலை போன்ற பொருட்களை விற்று தங்களின் ஜீவனோபாயத்தை நடத்துவதாக சமூக வலைதளங்களில் செய்திகள் வந்தன.

அத்தோடு பல்வேறுபட்ட பிரதேசங்களில் ஐந்தாம் ஆண்டுவரை படிக்கின்ற மாணவர்கள் இவ்வாறான எந்தவொரு வருமானமும் இல்லாத நிலையில் இவ்வாறு சிறு தொழில்கள் செய்வதாக ஆளுநர் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதனையடுத்து கிழக்கு மாகாண பாடசலைகளில் ஐந்தாம் ஆண்டுவரை கல்வி கற்கின்ற தந்தையை இழந்த மாணவர்களுக்கு ஒரு மாதத்திற்கு தலா 500 ரூபா வீதம் உடன் வழங்குமாறு ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தந்தையை இழந்த மாணவர்களுடைய பெயரில் வங்கிக்கணக்கொன்று திறக்கப்பட்டு மார்ச் முதலாம் திகதி தொடக்கம் குறிப்பிட்ட மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு அந்த நிதி வைப்பிலிடப்படும்.

'இதன்மூலம் அவர்கள் அந்த நிதியை பெற்று தங்களின் அடிப்படை தேவைகளை நிறைவு செய்வதற்குரிய திட்டத்தை தான் ஆரம்பித்து வைத்துள்ளதாகவும், உரிய மேலதிக நிதி கிடைக்கும் பட்சத்தில் திட்டத்தை 9ஆம் ஆண்டு வரை விரிவாக்கவும் நினைத்துள்ளதாகவும்' ஆளுனர் ஹிஸ்புல்லாஹ், அரங்கத்தின் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## பாங்கொக்கில் விருதுகளை வென்ற ஈழத்து தமிழ் விஞ்ஞானி வினோஜ்குமார்!



(காரைதீவு சகா)

புதன்கிழமை மாலை பாங்கொக்கில் நடைபெற்றுமுடிந்த சர்வதேச அறிவியல் புலமை கண்டுபிடிப்பு மற்றும் தொழினுட்பக் கண்காட்சி மற்றும் போட்டி - 2019 இல் இலங்கைத் தமிழ் விஞ்ஞானி சோமசுந்தரம் வினோஜ்குமார் 3சர்வதேவ பதக்கங்களையும் 5 நாடுகளுடைய விசேட சிறப்பு விருதுகளையும் பெற்று சாதனைபடைத்துள்ளார்.

அவர் மேடையில் தமிழர் கலாசாரப்படி வேட்டி கட்டிச்சென்று தனக்கான பதக்கங்களைப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண பல்கலைக்ககழகத்தில் பயிலும் இவர் அம்பாறை மாவட்டத்தின் சம்மடாந்துறையிலள்ள கோரக்கர் கிராமத்ததைச் சேர்ந்தவராவார். இவர் ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பவுள்ளார்.

( மூன்று சர்வதேச விருதுகளும் ஐந்து நாடுகளுடைய விசேட சிறப்பு விருதுகளும் ) விபரம் வருமாறு

1. SHOES' HELPER எனும் கண்டுபிடிப்புக்கு பொதுப் பயன்பாடுகள் தொழினுட்ப பிரிவில் "சர்வதேச வெள்ளி விருதும்" , Association of British Investors & innovators of United Kingdom இருந்து SPECIAL PRIZE AWARD ,
Manila Young Inventors Association of Philippines இருந்து PHILIPPINES GOLD விருதும்

02. TWO WHEELS' HELPER எனும் கண்டுபிடிப்புக்கு பொறியியல் தொழினுட்ப பிரிவில் "சர்வதேச வெண்கல விருதும்" Macao Invention and Innovation Association of Macao இருந்து LEADING INNOVATION AWARD ,
Indian Innovator Association of India இருந்து SPECIAL INNOVATION விருதும்

03. WIRE BUILDING TOOL எனும் கண்டுபிடிப்புக்கு கட்டிட நிர்மாண தொழினுட்ப பிரிவில் " சர்வதேச வெண்கல விருதும்",
Citizen Inventor & Innovator Association of Singapore இருந்து OUTSTANDING INNOVATION விருதும்

## புனித லூர்த்து அன்னை வருடாந்த பெருவிழா



பார் வீதி பெரிய உப்போடை மட்டக்களப்பு புனித லூர்த்து அன்னை ஆலயதின் வருடாந்த நவ நாள் விழா 01-02-2019 கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. முதல் 08 நாளும் வட்டார இறைமக்களின் ஒத்துழைப்புடன் விழா நடைபெற்று 09-02-2019 அன்று சுற்றிபிரகாரமும் 10-02-2019 ஞாயிறு காலை 7:00 மணிக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி பொன்னையா ஜோசப் தலைமையில் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு பெருவிழா நிறைவுபெறும்

-லியோண்

## ஊடக சுதந்திரம் தொடர்பிலான கவன ஈர்ப்புப் போராட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகத்தின் முன்பாக பிரதேசெயலக உத்தியோகத்தர்கள் ஊடக சுதந்திரம் தொடர்பிலான கவனஈர்ப்பு போராட்டம் ஒன்றை கடந்தபுதன்கிழமை(06) மாலை நடத்தினர். ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் நா.வில்வரெத்தினம் தொடர்பில் அவதூறான வகையில் இணையத்தளங்களில் பொய்யான தகவல்களை வெளியிடப்பட்டமைக்கு எதிர்பபுத் தெரிவித்தே செயலக உத்தியோகத்தர்கள் இந்தக் கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். ஊடக சுதந்திரத்தை துஸ்பிரயோகம் செய்யாதே! அரச அதிகாரிகள் மீது வேண்டுமென்று அவதூறு வெளியிடப்படுத்துவதை நிறுத்து போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கி, உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## அம்பாறை மாவட்ட கூடைப்பந்தாட்ட போட்டியில் காரைதீவு சம்பியன்!

(காரைதீவு நிருபர் சகா)

அம்பாறை மாவட்ட கூடைப்பந்தாட்ட போட்டி நேற்று காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரியில் மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியின் இறுதிப்போட்டியில் காரைதீவு பிரதேச செயலக அணி மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக அணியினர் பங்குபற்றியிருந்தனர்.

இப்போட்டியில் காரைதீவு பிரதேச செயலக அணியினர் சம்பியனாகவும் கல்முனை வடக்கு பிரதேச செயலக அணியினர் இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.



இப்போட்டியில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் அமீர் அலி கலந்து சிறப்பித்தார்.

## சமாதான நீதவான் இலட்சிணை



ஆரையம்பதியில் கடந்த ஜனவரி மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற சமாதான நீதவான்களுக்கான கருத்தரங்கில் சட்டத்தரணி உவைஸினால், சமாதான நீதவான்களுக்கான இலட்சிணை, அகில இலங்கை சமாதான நீதவானான எஸ். எம். சிவானந்தனுக்கு அணிவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## அரங்கத்தில் ''படுவான்'' திசை கொடுத்த ஒளி

மட்டக்களப்பில் இருந்தும் தினசரிப் பத்திரிகை வெளியாகியகாலமொன்று இருந்தது. படுவான்கரைப் பகுதியிலும் பத்திரிகை நிறுவனம் அமைந்து தினசரிப்பத்திரிகைகள் வெளிவந்த காலமும் உண்டு.



காலவோட்டத்தில், குறிப்பாக யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் மட்டக்களப்பிலிருந்து பத்திரிகைகள் வெளிவராத போதும், தேசிய பத்திரிகைகளே மட்டக்களப்பில் இடம்பிடித்திருந்தன. ஆனாலும் பிராந்திய தினசரிப்பத்திரிகை மட்டக்களப்பில் இருந்து தற்போது வெளிவருகின்றதில்லையே என்ற கவலையும், எப்போது வெளிவரும் என்ற ஏக்கமும் தற்போதும் இல்லாமல் இல்லை. வெளிவரவேண்டும் என்பதற்கு பல காரணங்களும் உள்ளன. ஆனாலும் அரங்கம் வாராந்த பத்திரிகை 2018 மாசியில் தனது ஒற்றைக்காலடியைப் பதித்தது. அக்காலடி பல காலடியாக மாறி இன்று 50வது இதழாக வெளிவருகின்றது. அரங்கத்தின் பிரசவமும் மட்டக்களப்பில் இருந்து தினசரிப்பத்திரிகை வெளிவரவில்லை என்ற கவலையின் பாதிப்பகுதியை குறைத்துள்ளது.
அரங்கம் அரங்கேறியதில் இருந்து இன்றுவரை மட்டக்களப்பின் படுவான்கரையை பேசாமல் வெளிவந்ததில்லை. படுவான்கரை மக்களோடு கலந்திட்ட அரங்கம், அவர்களின் கவலையையும், மகிழ்ச்சியையும், தேவையையும் படுவான்திசையின் மூலம் வாராந்தம் வெளிக்கொணர்ந்து கொண்டிருக்கின்றது.

மனதில் உறுதியிருந்தால் சாதிக்க தவறுதில்லை என்ற தலைப்புடன், மாற்றுத்திறனாளியொருவரின் சாதனைப்பயணத்தின் வெளிக்கொணர்வுடன் ஆரம்பித்த படுவான்கரையும் அரங்கமும், கல்வி ரீதியான சாதனைகளையும், வீழ்ச்சியினையும், தேவையினையும் சந்தர்ப்ப சூழலில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

பண்பாடுகளின் வளர்ச்சியையும், மாற்றமடையும் நிலையினையும் காலத்திற்கேற்ற வகையில் கூறிவருகின்றது. மக்களின் அடிப்படை தேவைகளையும், அல்லலுறும் நேரங்களையும் வெளியுலகிற்கு வெளிகாட்டி நிற்கின்றது. சுரண்டப்படும் வளங்களையும், எதிர்நோக்கவிருக்கும் பிரச்சினைகளையும் கணக்கிட்டு வாசகர்களின் கையில் கொடுக்கின்றது. கடன் நோயையும், உடல்நோயையும், குழந்தை பிறப்பு குறைந்தமையினையும் விபரங்களோடு சுட்டிக்காட்டுகின்றது. பிள்ளைகள் மனதில் பதியும் சமூகக்காட்சிகளையும், குப்பையாகிய மண்முனை தென்மேற்கையும், கழிவைக் கொண்டு உருவாக்கும் பயன்பாட்டு பொருட்கள் பற்றியும் படுவான்கரை மக்களோடு நின்று அரங்கம் பேசுகின்றது. மாற்றுத்திறனாளிகள் தொடர்பிலும், மருத்து விச்சுகள் பற்றியும், படுகொலைசெய்யப்பட்ட உறவுகள் தொடர்பிலும் அரங்கம் ஆறுதலாய் சொல்லிவருகின்றது.

படுவான்கரை மக்களின் வாழ்க்கையோடு கலந்திட்ட சோகங்களையும், சந்தோசங்களையும், எழுச்சிகளையும், வீழ்ச்சிகளையும் மற்றவரோடு பேசிவிட்ட மனதிருப்தியை அரங்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. படுவான்கரை மக்களின் பிரச்சினைகளை உரியவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகின்றது. சாதனையாளர்களை மற்றவர்களுக்கு இனங்காட்டிக் கொடுத்துள்ளது. இது அரங்கம் படுவான்கரைக்கு கொடுத்த ஒளியே.

கைத்தொல்லைபேசிகளால், நூலகங்களை நாடாது, இணையங்களை நாடும் தற்கால இளைஞர் யுவதிகளுக்கு மின்னிதழ்களாகவும், இணையதளத்திலும் படுவான்கரையின் கதைகளை வெளிக்கொணர்ந்து வருகின்றது. தசாப்தங்களை தாண்டியும் பல்துறைகளில் அபிவிருத்தி காணாது, நாள்தோறும் சிரமங்களை எதிர்கொண்டு, வாழ்க்கையை மன உளச்சலோடு கழித்துக் கொண்டிருக்கும் படுவான்கரை மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அனைத்துத்தரப்பினரும் முன்வர வேண்டும். குறைகளே அதிகம் நிரம்பியுள்ள படுவான்கரை நிறைவாகி நிமிர்ந்து நிற்க அனைத்துசார் தினைக்களங்களும் தத்தமது செயற்பாடுகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும். இதற்காக வலையிறவு, மண்முனை, பட்டிருப்பு போன்ற பாலங்களில் இருந்து இம்மக்களுக்கான பணி ஆரம்பிக்கப்பட வேண்டும். 50 இதழ்களில், படுவான்திசையின் பக்கங்கள் பல மக்களின் குறைகளை சுட்டிகாட்டியே நின்றது. இந்நிலை தொடரும் அரங்க இதழ்களிலும் வெளிவராது, சாதனைகளும், வெற்றிகளும், எடுத்துக்காட்டுக்களும் கொண்டவற்றை தாங்கியதாக படுவான்திசை பக்கம், அமைய திணைக்களம்சார் அதிகாரிகளினதும், மக்கள் பிரதிநிதிகளினதும் செயற்பாடு உத்வேகமாக அமைய வேண்டும் என்பதே அரங்கத்தின் படுவான்திசையின் எதிர்பார்ப்பாகும்.

வெள்ளிதோறும் நாடிவரும் அரங்கம், வெகுவிரைவில் நாளிதழாய் மாற்றமடைந்து, படுவான்கரையின் நாள் செய்திகளும் படுவான்கரை மக்களின் கரம்கிடைக்க வேண்டும்.

**படுவான் பாலகன்**

## அரங்கம் இதழ் 50

அரங்கத்தின் இதழ் 50 இது. ஆனால், இதுவொன்றும் ஐம்பது ஆண்டு கடந்த இதழ் அல்ல. பெரும் சாதனை என்றும் சொல்ல முடியாது.

ஆனால், போரினால் வீழ்ந்துபோன எமது மண்ணைப் பொறுத்தவரை இந்த 50 இதழ்களை தாண்டியது எமக்கு பெருமைதான். இங்குள்ள நிலவரம் அப்படி.

கிழக்கு மாகாண தமிழர்களுக்காக, அவர்கள் விடயங்களைப் பேச, அவர்களுக்காகப் பேச இந்த இதழை நாம் அறிமுகம் செய்தோம்.

எம்மவரின் மத்தியில் போருக்குப் பின்னர் வாசிப்பு குறைந்திருக்கிறது என்ற விடயத்தை மனதில் கொண்டு அரங்கம் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. அதனை எம்மவர் உதவியில், அனுசரணையில் தொடரலாம் என்பது எமது எண்ணம்.

ஏனைய பல பத்திரிகைகள் படுவான்கரை போன்ற பிந்தங்கிய எமது பகுதிகளை புறக்கணிக்கும் நிலையில், நாம் எமது இதழை அங்குள்ள மக்களுக்கு இலவசமாக கொண்டுபோய் விநியோகித்து வருகின்றோம்.

எது நடந்ததோ, இல்லையோ, எம் நண்பர்கள் சிலரது உதவியில் இதனை இன்றுவரை தொடர்ச்சியாகக் கொண்டு வந்திருக்கிறோம். அதேவேளை கிழக்கு மாகாணம் குறித்த பல விடயங்களை மிகவும் ஆழமாகவும் கனதியாகவும் இதில் ஆராய்ந்திருக்கின்றோம். பல முயற்சிகளுக்கு ஊக்கியாக இருந்திருக்கிறோம்.

மக்கள் தடுமாறிய சூழ்நிலையில் அவர்களுக்காக தடுமாறாமல் குரல் கொடுத்திருக்கிறோம்.
அதேவேளை தற்கால ஊடக நிலவரங்களை கருத்தில் கொண்டு வீடியோ (காணொளிகள்) மூலமாகவும் கிழக்கைப் பற்றி காத்திரமாகப் பேசி வருகின்றோம். இதன் அடுத்த கட்டமாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் முழுமையாக இணையும் வகையில் சிறப்பு இணையப் பக்கங்களையும் வெளியிட்டு வருகின்றோம்.

எமது பத்திரிகை பல தரப்பினராலும் கணிசமாக வாசிக்கப்படுகின்றது என்பது எமது வெற்றி. ஆனால், பார்த்தும் பாராதது போல இருப்பவர்கள் குறித்து மனதில் வருத்தம் இருக்கிறது. ஆனால், அது இங்கு முக்கிய விடயமல்ல. நேர்மையான வாசகர்களும் இருக்கிறார்கள். அடுத்தவர் ஏற இழுத்துப் பிடிக்கும் "நண்டு"களும் இருக்கின்றன. நாம் நேர்மையை நேசிப்போம்.

கலை, கலாசாரம், பொருளாதாரம் மாத்திரமன்றி அரசியலிலும் மக்களுக்கு எது சரி என்று படுகின்றதோ அதனை எந்தவிதமான தயக்கமும் இன்றி உரத்து ஒலிப்போம். அதில் பின்வாங்க மாட்டோம். எமது அரசியல் நிலைப்பாடுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்ட தருணங்கள் உண்டு. பொறுப்பற்ற வகையில், ஊடக தர்மத்தை மீறி தாக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால், மக்களுக்காக பேசுவது, எவருக்குப் பிடிக்காவிட்டாலும் அதனைச் செய்வது என்ற எமது நிலைப்பாட்டில் இருந்து மாறமாட்டோம்.

50வது இதழ் என்பது 500, 5000 என்று நீள வேண்டும் என்பது எமது கிழக்கின் தேவை. அத்தோடு இலவசமாக இது விநியோகிக்கப்பட வேண்டும் என்பதும் இன்னுமொரு தேவை. அடுத்ததாக இது முழுமையாக ஒரு டிஜிட்டல் ஊடகமாக பரிமளிக்க வேண்டும் என்பது காலத்தின் அவசியம். ஆனால், இதற்கு என்ன தேவை என்பது அனைவரும் அறிந்தது. உங்கள் சிறு விளம்பரங்கள்கூட எமது பணிக்கு பேருதவியாக இருக்கும்.

ஆரம்பத்தில் 'இப்படி ஒரு ஊடகம் தேவை' என்று நாம் பேசிய போது 'ஆமாம்' போட்ட பலர், பத்திரிகை ஆரம்பித்ததும் காணாமல் போய்விட்டார்கள். ஆனாலும், நாம் எமது பணியை ஆரம்பித்துத் தொடருகிறோம். ஆனால், ஒரு கை மட்டும் தட்டினால் ஓசை வராது. கிழக்கு மண்ணுக்கு ஏதாவது நடக்க வேண்டுமானால் நாம் எல்லோரும் சேர்ந்து பேச வேண்டும். எமது ஊடகம் நிலைக்க வேண்டும். அடுத்தவர் செய்யட்டும் என்று காத்திருப்பதில் எந்தவிதமான பலனும் கிடையாது. நாமே இறங்கியாக வேண்டும். நான் இறங்கிவிட்டேன். எனக்குத் தெரிந்ததை செய்ய தூர இடத்தில் இருந்தபோதிலும் இங்கு வந்துவிட்டேன். நீங்கள் எப்படி??? துணிந்தவர் அரங்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

--- சீவகன் பூபாலரட்ணம்

அரங்கம் செய்திகள் பத்திரிகை,
227, பார் வீதி மட்டக்களப்பு.
தொலைபேசி : 0713999091





# பட்டறிவு

## கோத்திர சபைக்கு சட்ட அங்கீகாரம் வழங்கிய தீர்ப்பு! (2)

ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியாளர்கள் அறிமுகப்படுத்திய கோல்புரூக் - கமரூன் மறுசீரமைப்பு ஆணைக்குழுவானது இலங்கையில் ஆண்டாண்டு காலம் அமுலில் இருந்த கிராமிய சபை முறையை ஒழித்துக்கட்டுமாறு பிரேரித்தது. அது பெயரளவிலான யோசனையாக இருந்தது. அவர்களால் உடனடியாக கிராமிய சபை, ரட்ட சபா, வறிக சபா முறைமையை இல்லாதொழிக்க முடியவில்லை.

கோத்திர சபைகள் இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் நடைமுறையில் இருந்தாலும் கூட கண்டி ராஜ்ஜியத்தில் பல்வேறு ஆதிக்க சாதியினர் மத்தியில் நீண்டகாலம் நடைமுறையில் இருந்ததையும் பல்வேறு ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இலங்கையின் வேடுவர்கள் பற்றிய ஆய்வுகளை செய்தவர்களில் முக்கியமானவர் செலிக்மன் (Seligmann). வேடுவர்கள் மத்தியில் வெளிக்கோத்திரங்களைச் சேர்ந்தவர்களை திருமணம் முடிக்கும் வழக்கம் இருக்கவில்லை என்று தனது நூலில் குறிப்பிடுகிறார்.[1]

இலங்கையில் பழங்குடிகள் மத்தியில் குலக் கோத்திர சம்பிரதாயங்கள் இன்னமும் இறுக்கமாக பேணப்படுகின்றன. கோத்திர சபை முறையும் கூட இன்னமும் இலங்கையில் வேடுவர் மத்தியில் அமுலில் இருக்கிறது. அவர்கள் வேடுவர் தவிர்ந்தவர்களை மணமுடிப்பதைக் கூட கோத்திர சம்பிரதாய மீறலாக கருதுகிறார்கள்.

மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் ஆங்காங்கு வேடுவ சமூகத்தினர் தமிழர்களுடன் ஓரளவு திருமண பந்தத்துக்கூடாக ஒன்று கலப்பது கணிசமாக நிகழ்ந்தாலும் கூட பல இடங்களில் தமது வேடுவர் சமூகத்துக்குள்ளேயே அவர்கள் "சாதி வேறுபாடுகளை" (கோத்திர வேறுபாடுகளை) பார்ப்பதைக் இன்றும் காண முடிகிறது. "அவர்கள் வேறு சாதி" என்று பகிரங்கமாகவே கூறுகிறார்கள். புறமணத் தடையும், அகமணமுறையின் இறுக்கமும் அவர்கள் மத்தியில் நீண்டகாலமாகவே நிலவுகிறது. மட்டக்களப்பு வாகரையில் வாழும் ஆதிவாசிகள் இன்றும் "வறிகசபை" யைக் கூட்டி தமது முடிவுகளை எடுத்து வருகிறார்கள் என்கிற செய்திகளைக் காணமுடிகிறது.

வருடாந்தம் ஒகஸ்ட் 9ஆம் திகதி ஆதிவாசிகள் தினத்தன்று மஹியங்கனையில் ஏராளமானோர் கலந்து கொள்ளும் "வறிக சபை" கூட்டம் நடப்பது பற்றிய செய்திகளையும் சிங்களத்தில் காணமுடிகிறது.

வேடுவர் பற்றி ஜேம்ஸ் ப்ரோ ஆய்வு செய்து வெளியிட்ட நூலில் "வறிக (கோத்திர) சித்தாந்தத்தின்படி" புறமணத்தடை (endogamy) அவர்களின் அடிப்படை பண்புகளில் ஒன்று என்கிறார். [2]

அதிசயிக்கத்தக்க தீர்ப்பு

1970ஆம் ஆண்டு அனுராதபுர மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு விசித்திரமான வழக்கு வந்து சேர்ந்தது. அந்த வழக்கை நடத்திய நீதிபதி வோல்டர் லத்துவஹெட்டி. இலங்கையின் முதலாவது குறைகேள் அதிகாரியும் (ஒம்பூட்ஸ்மன்) அவர் தான். ஏறத்தாழ 60 வருடங்கள் சிவில் சேவையில் இருந்தவர். "கோத்திர சபை" பற்றி அவர் வழங்கிய ஒரு தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அவர் லங்காதீப பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் அந்த சம்பவத்தைப் பற்றிய கேள்விக்கு இப்படி விளக்குகிறார்.[3]

கேள்வி : வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோத்திரசபை வழக்கை இந்தக் காலத்தில் தானே விசாரித்தீர்கள்?

பதில்: ஆம். அதுஒரு வரலாற்றுப் பதிவுபெற்ற ஒரு வழக்கு. அந்த தீர்ப்பின் மூலம் கிராமத்தில் நடைமுறையிலிருந்த பாரம்பரிய வறிக சபைக்கு சட்ட அந்தஸ்து கொடுத்தேன்.

கேள்வி: பலரும் அறியாத அந்த கதை தான் என்ன?

பதில்: கஹடகஸ்திகிலிய பிரதேசத்தில் முஸ்லிம் இளைஞன் ஒருவர் விவசாய வேலைகளுக்காக வந்தான். அவன் தங்கியிருந்த வீட்டில் இருந்த பெண்ணுடன் காதல்வயப்பட்டான். சில நாட்களில் அவர்கள் இரகசியமாக திருமணம் செய்துகொண்டார்கள். அந்தப் பெண்ணின் குடும்பம் அந்த காலத்தில் அங்கிருந்த வறிக சபையின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்துவந்தவர்கள்.

கேள்வி: இது வழக்காக ஆனது எப்படி?

பதில்: முஸ்லிம் இளைஞன் சிங்கள பெண்ணை விவாகம் செய்தததால் அந்த கோத்திரத்தினரின் கௌரவம் போய்விட்டது என்று தான் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது. அந்தக் காலத்தில் அநுராதபுரவில் இருந்த பிரபல வழக்கறிஞரான மகாதிவுல்வெவ என்பவர் தான் அந்த இளம் தம்பதிகளுக்காக ஆஜாராகியிருந்தார். எனக்கோ இந்த கோத்திர சபை பற்றி ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. வழமை போலத்தான் நானும் வழக்கைத் தொடங்கினேன். சாட்சிகளை அழைக்க தாயாரான போது அங்கு முகத்தில் தாடி மீசை நிறைந்த விசித்திரமான ஐந்து ஆண்கள் வந்திருந்ததைக் கவனித்தேன். அவர்கள் யாரென்று நான் வினவினேன். அவர்கள் தான் கொத்திரசபையின் தலைவர்கள் என்று பதில் வந்தது.

கேள்வி : அவர்கள் உங்களிடம் என்ன சொன்னார்கள்?

பதில்: சிங்கள ராஜ்ஜியக் காலம் தொட்டு பின்பற்றப்படும் வறிக சபையின்படி கோத்திர விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக தண்டனை வழங்க எங்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அப்படி தண்டனைக்கு உள்ளானவர்களுக்கு எங்கள் வீடுகளில் இருந்து தீபந்தத்தை வழங்குவது கூட தடை. கூடவே அவர்களின் அதிகாரங்கள் பற்றி இன்னும் பல விடயங்களை கூறினார்கள்.

அங்கு வந்திருந்தவர்கள் தாம் தான் அந்த கோத்திரக் குழுவின் தலைவர்கள் என்றார்கள். வறிக சபை ஒரு பலம்மிக்க ஒரு அமைப்பாக சமூகத்தில் இருப்பது எனக்கு விளங்கியது. ஆனால் அதற்கு சட்ட அந்தஸ்து வழங்குவது என்பது எளிமையான காரியமில்லை. நானும் ஒன்றும் அறிந்திருக்கவில்லை. எனவே தீர்ப்புக்கு முன்னர் இதைப் பற்றி ஆராய வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தேன்.

என்.சரவணன்

கேள்வி : நீங்கள் எப்படி தகவல் திரட்டினீர்கள்?

பதில்: மாலை 4 மணிக்கு நீதிமன்ற அலுவல்களை முடித்துக்கொண்டு அனுராதபுர நூல்நிலைய சபைக்குச் சென்றேன். அங்கு சென்று ரஜரட்ட சாதிமுறை, வறிக சபை என்பவை பற்றிய தகவல்கள் அடங்கிய நான்கைந்து நூல்களை ஒருவாறாக தேடிக்கண்டுபிடித்துவிட்டேன். அன்றிரவு 12 மணிவரை அவற்றை படித்தேன்.

அங்கிருந்த சமூக அமைப்பில் வறிக சபை அமைப்புமுறை எந்தளவு முக்கியத்துவம் மிகுந்தது என்பதை புரிந்துகொண்டேன். பொலிஸ் இல்லாத காலத்தில் அந்தந்த கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் தமது அடையாளங்களைப் பாதுகாத்துக் கொண்டு எப்படி தம்மை நிர்வகித்து வந்திருக்கிறார்கள் என்பது பற்றி அந்த நூல்களில் இருந்தன. ஆனாலும் எனது தீர்ப்பை வழங்க இந்த நூல்கள் போதுமானதல்ல. மேலும் அறிய ஆவலாக இருந்தது.



கேள்வி : யார் அதற்கு உதவினார்கள்?

பதில்: அந்த சமயத்தில் அனுராதபுர அட்டமஸ்தன தலைமை பதவியில் இருந்தவர் உந்துரவஹல்மில்லேவே ஸ்ரீ சுமனரேவத்த தேரர். அவருடன் தொலைபேசியில் முதலில் கதைத்தேன். அவரை சந்திக்க விரும்புவதாக தெரிவித்தேன். வாருங்கள் ஆனால் இரவு 9.30க்குப் பின் வாருங்கள் ஏனென்றால் நீதிபதியொருவர் எனது பன்சலைக்கு வந்து சென்றது சனங்களுக்கு தெரியாமல் இருக்கட்டும் என்றார். சொன்னபடி இரவு சென்று வறிக சபை பற்றிய விபரங்களைக் கேட்டேன்.

பதில்: அவர் பல தகவல்களை எனக்குச் சொன்னார். மாடொன்றை களவாடிய குற்றத்துக்கு வறிக சபை கொடுத்த தண்டனையொன்றைப் பற்றியும் அவர் விளக்கினார். பௌத்த பிக்கு சொன்ன தகவல்களையும் நூல்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களையும் சேகரித்துக்கொண்டு தீர்ப்பெழுத நீதிமன்றத்துக்கு சென்றேன்.

கேள்வி : எத்தகைய தீர்ப்பை வழங்கினீர்கள்?

பதில்: நீண்ட காலமாக பின்பற்றப்பட்டுவரும் வறிக சபையின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று தீர்ப்பு வழங்கினேன். இதை இன்னொரு விதமாகச் சொன்னாள் "வறிக சபை"க்கு சட்ட அந்தஸ்து வழங்கினேன். வறிக சபையின் சம்பிரதாயங்களை ரோம / ஒல்லாந்து சட்டங்கள் குழப்பக்கூடாது என்பதே எனது கருத்தாக இருந்தது. நமது வரலாற்றில் வறிக சபையை சட்ட ரீதியில் அங்கீகரித்த தீர்ப்பு அதுதான். அப்படித்தான் அது வரலாற்றுப் பதிவு பெற்றது.

இந்தத் தீர்ப்புக் குறித்து இன்றளவிலும் ஏராளமான விமர்சனங்கள் நிலவவே செய்கின்றன. ஆனால் இப்போது அரச நீதிமன்றங்களில் நடைமுறையில் வறிக சபையை அங்கீகரித்து தீர்ப்பு வழங்கும் நடைமுறை இல்லை. ஆனால் பழங்குடிகளின் மத்தியில் தமக்குள் வறிக சபை கூட்டங்களையும், தீர்ப்புகளையும், தீர்மானங்களையும் நிகழ்த்தியே வருகின்றனர்.

# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும் 14

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

## சடங்கிசை- சிலம்பிசையும் பறையிசையும் உடுக்கிசையும். அம்மனைக்காய் இசையும்

மட்டக்களப்பில் ஆண்டுதோறும் நடைபெறும் இவ்வழிப்பாட்டுச் சடங்குகளில் சிலம்பொலி மிக முக்கியமானது சடங்குக் காலங்களில் சிலம்பொலி ஆலய வெளி முழுவதையும் நிறைத்து பின் பக்தர்கள் உடல் முழுவதையும் நிறைத்து நிற்கும். தெய்வக்காரர் இரண்டு கைகளிலும் இவ்விரண்டாக நான்கு சிலம்புகள் அணிந்து கொள்வர். அவர்கள் உடல் உருவேறி நடுங்குகையில் அவர்கள் கைகளில் அணிந்திருக்கும் சிலம்பு ஒரு வித ஒலி எழுப்பும். அந்த ஒலி தொடர்ச்சியாகக் கேட்டபடி இருக்கும்.

அதுதான் சடங்கொலியின் ஸ்தாயிபாவம் எனலாம்.

பெரிய கோவிலுக்கு முன்னால் பலதெய்வங்களுக்குரிய பந்தல்கள் இருக்கும். இந்தப்பந்தலுக்குப் பந்தல் உருக்கொண்டோர் “ஹாய்” “ஹாய்” “ஹூய்” என ஓசை நயத்துடனான சில குரல்களை அடிவயிற்றிலிருந்தும் உச்சம் தலையிலிருந்தும் எழுப்பிக் கொண்டு அங்கும் இங்கும் ஓடுகையில் அச்சிலம்பு இன்னொரு வித ஒலி எழுப்பும்.. இப்படி ஓடுகையில் ஒரே அடியாக ஓடாமல், இரண்டு அடிக்கு ஒரு முறை நின்று நிதானித்து விட்டு விட்டு தெய்வக்காரர் ஓடுவர். அப்போது விட்டு விட்டு கேட்கும் அச்சிலம்பிசை சடங்கில் சஞ்சாரி பாவம் எனலாம்.

**எழுத்திலேயே ஆடவைக்கும் கூத்துக் கலைஞர் பேராசிரியர் மௌனகுரு. இங்கு எல்லைவீதி வைரவர் சடங்கை கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். பலிச் சடங்கில் தெய்வக்காரர்களின் ஆட்டத்தையும், அதன் பின்னுள்ள மெய்மறந்த நாடகத்தையும் எம் நரம்புகளில் உருவாக ஏற்றுகிறார். கலைகளின் அரங்கம் எங்கள் ஊர் என்பதை நிரூபிக்க முயல்கிறார்.**

**--- ஆசிரியர்**

பரத நடனத்தில் ஸ்தாயிபாவம் என்பது அடிப்படை பாவமாகும் உதாரணமாக கோபம் எனும் ரௌத்ரம் ஒரு ரஸம். அக்கோபத்துடன் காணப்படில் அது ஸ்தாயிபாவம் எனப்படும்.. அருவருப்பு எனப்படும் பீபத்ஸம் இன்னொரு ஸ்தாயிபாவ ரஸமாகும். ஆனால் கோபத்துடன் அருவருத்தால் அந்தப் பாவம் கோபம் எனும் ஸ்தாயி பாவம் மீது கட்டப்படும் சஞ்சாரி பாவமாகும்.

இக்கோட்பாடு சடங்கின் சிலம்பிசைக்கும் பொருந்தும் போலத் தெரிகிறது. உருவேறி நடுங்கும் போது எழும் சிலம்பிசை ஸ்தாயிபாவம் எனில், அடித்தளமான அவ்விசையில் நின்று இன்னும் பல ஆட்ட இசைகளை எழுப்புவது சிலம்பிசையின் சஞ்சாரி பாவம் எனலாம். இச்சிலம்பிசை நுட்பங்கள் பற்றி நிறைய எழுதலாம் அது பின்னொருபோது செய்யப்படும்.

மாரி காத்தவராயன் முதலான தெய்வம் பிடித்தோரை ஆட்டப் பாடப்படும் மாரி அம்மன் கும்மி, மாரி அம்மன் தாலாட்டு என்னும் இசைப்பாடல்களைப் பாடுகையில் அத்தாளத்திற்குத்தக சிலம்பை இத்தேவாதிகள் பல்வேறு விதமாக தம்மை அறியாது இசைக்கிறார்கள் போலத் தோன்றுகிறது.


இதுவும் உயர்ந்த ஓர் சஞ்சாரி பாவமே!

இந்த ஒலியை எழுப்ப அவர்கள் தமது உடலைப் பல விதமாக அசைப்பர். தேர்ச்சி பெற்ற ஒரு நடனகாரனின் உடல் மொழி அதில் தெரியும். நின்ற இடத்தில் நடுங்கல்.. நடுங்கும்போது ஒவ்வொரு தசையும் அசைதல்... பின் தலை அசைத்தல் அதன் பின் தலையை மாத்திரம் சுற்றி ஆடல்... அதன்பின்னர் இடுப்பைச் சுற்றி ஆடல். அதன் பின்னர் தலை உடல் முழுவதையும் இணைத்து நின்றபடி ஆடல் அதன் நடந்தாடல், கிடந்தாடல் அசைந்து ஆடல் இடசாரி வல சாரியாக ஆடிவரல் என இவ்வாடல்கள் பலவகைப்படும். இவ்வாடல்களை வருடம் தோறும் செய்து வருவதால் தெய்வமாடுவோர் ஓர் ஆட்டத் தேர்ச்சியும் பெற்று விடுகிறார்கள். இந்த ஆடலை தமது சிறுவயதிலிருந்து பார்த்து உள்வாங்கிக்கொள்வதே அவர்கள் ஆடல் கற்கும் முறையாகும்.

தமிழர் ஆடலும் பாடலும், இசையும் தோன்றிய அடித்தளம் தமிழரின் இச்சடங்குகளே என நான் எண்ணுகிறேன்.

பலி கொள்ளும்போது மாத்திரம் காலிலும் சிலம்பணிவார்கள். மற்றப்படி கைச்சிலம்பு மாத்திரமே அணிந்து ஆடுவார்கள், கோவில் முழுதும் காற்றில் சிலம்பொலி வித்தியாசம் வித்தியாசமாக கேட்டபடி இருக்கும் இவ்வோசைக்கு அனுசரணையாக பறை ஒலியும் உடுக்கொலியும் இணையும்
“ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே” என்று அப்பர் சுவாமிகள் சிவபெருமானுக்குக் கூறும் வார்த்தைகள், சிறு தெய்வம் எனக்கருதப்படும் இந்த நரசிங்க வைரவ ஸ்வாமி கோவிலில் நரசிங்கமாக அபிநயிக்கும் அந்த உருவேறிக்கும் பொருந்தும் போலத் தெரிகிறது. இந்தச் சிலம்போசை, பறை ஓசை, உடுக்கோசை கேட்டு வளர்ந்த இன்றும் வளர்ந்துகொண்டிருக்கின்ற சிறு பிள்ளைகளும் இளைஞர்களும் அடங்கிய தலைமுறையொன்று இன்றும் மட்டக்களப்பில் உண்டு. ஆம் இவ்விசை அத்தலைமுறையை தம்மளவில் லய ஞான முள்ளவர்களாக்கும் தன்மையது, நாடகத் தன்மை மிகுந்த சில சடங்குகளுக்கு இவ்வோசைகள் சிறந்த பின்னணி ஆக அமையும். உதாரணத்திற்கு இங்கு சேவற்பலிகொள்ளும் ஓர் சடங்கைக் கூறுகிறேன்






### நரசிங்க வைரவர் சேவலைப் பலி எடுக்கும் சடங்கு

---

நரசிங்க வைரவர் கோயிலில் சேவற் பலிச் சடங்கு நாடகத்தன்மையுடைய சடங்காகும். ஏழு நாட்கள் நடைபெறும் இச்சடங்கின், இரண்டாம் நாள் அன்று நரசிங்க வைரவருக்கு ஆடும் தலைமைத் தெய்வக்காரர் கோவில் வெளிக்கு வந்து, அங்கு தாம் பலி கொள்வதற்கெனக் கோயிற் காணிக்கையாக வந்திருக்கும் சேவல்களுள் மிகபெரிய தோற்றம் கொண்ட சேவல் ஒன்றைத் தெரிந்து, அங்கிருக்கு சூலம் ஒன்றிற் கட்டிவிட்டுச் செல்வர். தினமும் நேர்ந்துவிட்ட அச்சேவலுக்கு மஞ்சள் பூசி பூசாரியார் மணிகிலுக்கி ஆராதனை செய்வார். இச்சேவலையே நரசிங்க வைரவர் இறுதி நாள் பக்தர்கள் காணப்பலி எடுப்பார்.

### சேவற் பலிச் சடங்கு

---

இந்த இறுதி நாள் சடங்கு நாடகத் தன்மை மிகுந்த பலிச் சடங்காகும். கோயிலை வளைத்து ஆட்கள் அமைதியாக அமர்ந்திருப்பார்கள். கோயில் முன்றிலில் பூசாரியார் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டிருந்த மிகப்பெரிய கொண்டைகொண்ட அப்பெரிய சேவலை தூக்கிப் பிடித்து உச்சாடனம் செய்வர்.

பூசாரியின் முன் ஆயத்தமாக நரசிங்க தெய்வத்திற்கு ஆடும் தெய்வக்காரர் கைகளில் நான்கு சிலம்பும் கால்களில் இரண்டு சிலம்புகளுமாக மொத்தம் ஆறு சிலம்புகள் அணிந்து, உடம்பு முழுதும் மஞ்சள் அப்பிய வண்ணம், வேற்றுருக்கொண்டு காட்சி தந்து, கோழிப்பலிக்கு ஆயத்தமாக உருக்கொண்டு தலை நிமிர்ந்து நிற்கும் பெரும் சேவலை உற்றுப் பார்த்த வண்ணம் நிற்பார்.

மயான அமைதி கோவில் வெளியில் திகழும்.

பூசாரியார் மந்திர உச்சாடனம் சொல்லத் தொடங்குவார். பூசாரி உச்சாடனம் சொல்லச் சொல்ல தெய்வக்காரருக்கு உரு மேலும் மேலும் ஏறும். உரு ஏற்றலுக்கு இயைய சிலம்பொலியும் பறை ஒலியும் உடுக்கொலியும் பின்னணியாக அமையும்.

பூசாரியார் மந்திர உச்சாடனம் சொல்லியபடி மந்திரத்தின் ஒர் சொல்லை சப்தமிட்டு அழுத்திக் கூறி, சேவலின் பிடரியில் கைவைத்து ஒரு அழுத்து அழுத்துவார். சேவல் தலை நிமிர்த்தி தன்னைப், பலிகொள்ளக்காத்திருக்கும் தெய்வக்காரரை பயமின்றி உற்றுப்பர்ப்பது போல தலைய மாத்திரம் நிமிர்த்தி நிற்கும்.

பூசாரியார் மூலஸ்தானத்திலிருக்கும் நரசிங்க மூர்த்தியையும் நரசிங்கமாக மனித உருவில் நிற்கும் தெய்வக்காரரையும் உற்று நோக்கியபடி ஓடிவா வைரவா உத்தண்ட வைரவா

கால பைரவா கபால பைரவா

நாடிவா வைரவா நரசிங்க வைரவா

எனக் குரலை உயர்த்திச் சப்தமிட்டு அந்தச் சப்தத்தை ஆணையாக்கி உரிமையோடு தெய்வத்திற்கு உத்தரவிட்டு வா வா என உறுக்கி அழைப்பார். அதில் ஒரு வேண்டுதலும் இணைந்து நிற்கும். அவரது இந்த மந்திர உச்சாடனம் முன்னே நிற்கும் தேவாதி உடலில் மேலும் மேலும் உருவேற்றும்.

கோழி நிமிர்ந்து தலைநீட்டி தன்னைப் பலிகொள்ளப்போகும் நரசிங்க உருக்கொண்டு நிற்கும் தேவாதியின் கண்களைப் பார்த்தபடி வா வா வந்து எனைப்பலி கொள் என தெய்வத்தை அழைப்பது போல பூசாரியின் கையில் தலை நிமிர்த்தி காத்து நிற்கும். நரசிங்க வைரவருக்கு நிற்பவர் உடலில் சன்னதம் மெல்ல மெல்லக் கூடும். தன் இரு கைகளையும் உச்சம் தலையில் குறுக்கு மறுக்காக வைத்தபடி ஆடாமல் தரதரவென்று இருகால்களாலும் தரையை உரசிக்கொண்டு முன்பின் பக்க வாடுகளில் சேவலை உற்று நோக்கிய வண்ணம் ஓர் ஆடல் அசைவில் வருவார். தவிலின் திம் திம் திம் திம் என்ற ஓசைக்குத் தக தலையில் இரண்டு கைளையும் உச்சம்தலையில் வைத்தபடி வேகமாக ஆடி, அவர் சேவலை நோக்கி செல்வதை மக்கள் பக்தியோடும் பயத்தோடும் பார்த்தபடி இருப்பர். தாய்மார் குழந்தைகளை அதைப்பார்க்க விடாது அவர் கண்களை மறைப்பர். பூசாரியாரின் மந்திர உச்சாடனம் கூடக்கூட ஆடுபவரின் சன்னதமும் கூடும். அதற்கேற்பப் பறை இசையும் உடுக்கிசையும் கூடும். பலிகொள்ள வரும் நரசிங்கத்திற்கு ஆடுபவர் பூசாரிக்கு முன்னராக பல்வேறு வளையங்கள் இட்டுச் சுழன்று, சுழன்று ஆடியவாறு இடது சாரி வலது சாரியாக வட்டமிட்டு வட்டமிட்டு உருக்கொண்டு ஆடி வருவார், இப்படி ஆடி வரும் அவர் சேவலை நெருங்கி நெருங்கி வருவார். பின் மெல்ல மெல்ல ஆடியபடி பின்னுக்குப்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# எமது கல்வியை முஸ்லிம்கள் பறிக்கவில்லை

## நாமே நம்மை வளர்க்கவேண்டும் : அதற்கான தலைவர்களை உருவாக்க வேண்டும்

கடந்த உயர்தரப்பரீட்சை முடிவு வந்ததிலிருந்து கிழக்கு மாகாணத்தில் தமிழரின் கல்விப்பெறுபேறு வீழ்ந்து முஸ்லிம்களின் பெறுபேறுகள் உயர்ந்துவிட்டதாக விசனப்பட்டுக்கொள்ளும் பலர், முஸ்லிம்கள் தமிழரின் கல்விப்பெபேறைத் தட்டிப்பறித்துவிட்டதுபோல பதிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



முஸ்லிம்களின் பெறுபேறுகள் நன்றாக அமைந்த பாடசாலைகள் எவை? முஸ்லிம்கள் செறிந்துவாழும் இடங்களில் இருக்கும் பாடசாலைகளில் ஒன்றாக இருக்கும். அந்தப்பாடசாலைகளின் பெறுபேறுகளை கடந்த 20 வருடங்களில் ஒப்பிட்டுப்பார்த்தால் பெரும் வளர்ச்சி இருக்கும். அது அவர்கள் பிரதேசத்துப்பாடசாலைகளை காலம் காலமாக கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றி வந்துள்ளார்கள் என்பதைப் பறைசாற்றும்.

காலம்காலமாக கணித விஞ்ஞான துறையில் நல்ல பெறுபேறுகளை பெற்றுவரும் தமிழ்ப்பிரதேச பாடசாலைகள் எவை? புனித மிக்கேல் கல்லூரி, மத்திய கல்லூரி, சிசிலியா கல்லூரி, வின்சன்ட் கல்லூரி என நான்கு பாடசாலைக்குள் அடக்கிவிடலாம். எப்போதாவது அந்தி பூத்ததுபோல களுதாவளையிலும் கல்லாறிலும், சிவானந்தாவிலும் ஒரு பெறுபேறு மட்டும் கிடைக்கும். அந்த நாலு பாடசாலைகளும் எங்கே இருக்கிறது மட்டக்களப்பின் நகரினுள் 1 கிலோமீட்டர் சுற்று வட்டத்திற்குள் அவை அடங்கிவிடும். முஸ்லிம்கள் தங்கள் பிரதேச பாடசாலைகளை விருத்தி செய்த காலத்தில் நாம் தமிழ்க் கிராமங்களில் வாழும் பிள்ளைகள் நல்ல பெறுபேறுகள் பெறும் விதமாக ஒரு பாடசாலையாவது மட்டக்களப்பு நகரம் தாண்டி விருத்தி செய்துள்ளோமா? வாவிக்கு மேற்கே இருக்கும் படுவான்கரை எனப்படும் பகுதியில் இருக்கும் மாபெரும் ஒரு சனத்தொகைக்கு ஒரே ஒரு பாடசாலையையாவது நாம் விருத்தி செய்துள்ளோமா? இல்லை இல்லை இல்லை. அந்தப்பகுதியில் இருக்கும் நல்ல பெறுபேறு பெறக்கூடிய மாணவன் நகரத்தில் இருக்கும் அந்தப்பாடசாலைகளில் இலகுவில் அனுமதி எடுத்துவிட முடியுமா? இங்கே நம் சமூகத்தில் இருக்கும் ஒரு கேவலமான மதச் சிந்தனையை போட்டு உடைக்கிறேன். சிசிலியா, புனித மிக்கேல் கல்லூரி போன்றவற்றில் முதலில் 60 வீதம் கத்தோலிக்கர்களை இணைத்த பின்பே மற்ற மதத்தவர்களுக்கு அனுமதி கிடைக்கும். மிஞ்சிய 40 வீதத்திலேதான் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ மாணவர்கள், இந்துக்கள், முஸ்லிகள் போட்டி போட்டு அனுமதி எடுக்க வேண்டும். நமக்குள்ளே இப்படியொரு கேவலமான மதவாத சிந்தனையை வைத்துக்கொண்டு இருக்கும் நாம் கல்வியில் எப்படி முன்னேற முடியும்?

அதையும் தாண்டி கிராமத்தில் படித்து, தன் திறமையை சாதரணதரத்தில் முழுவதும் வெளிக்காட்டி, எஞ்சிய 40 வீதத்தில் இடம்பிடித்து நகருக்கு திடீரென வரும் மாணவர்களால் உயர்தரத்தில் சாதிக்க முடியுமா? கிராமத்தில் வீட்டுக்கஷ்டத்தில் கிழிந்த சீருடையையும் சப்பாத்தையும் போட்டுக்கொண்டு சொந்த ஊரில் பாடசாலைக்குப்போய் சாதாரண தரத்தில் எல்லாப்பாடத்திலும் திறமைச் சித்தி பெற்றவன், நகருக்கு வந்து அங்கே பல உயர்ந்த சமூக மட்டத்தில் இருக்கும் மாணவர்களோடு முட்டி மோதி, முற்றிலும் மாறுபட்ட சமூகத்தில் தன்னை நிலைப்படுத்திக்கொள்ள முன்னமே உயர்தரப்பரீட்சை வந்துவிடும்.

இப்படி உயர்தரத்திற்கு மட்டுமென நகர்ப்புறப்பாடசாலையை என்காலத்தில் தேடிவந்த சக மாணவர்களை நினைத்துப்பார்க்கிறேன். எனது ஆண்டில் மருத்துவ பீடத்திற்குத் தெரிவானவர்களில் ஆரம்பக்கல்வியை கிராமத்தில் படித்து உயர்கல்விக்கு நகருக்கு வந்து படித்தவர்களில் நானும் இன்னும் ஒருவரும் மட்டுமே. மற்றையவர்கள் அனைவரும் சிறுவயதிலிருந்தே நகர்ப்புறத்தில் படித்தவர்கள்.

சிவச்சந்திரன் சிவஞானம்

(அந்த வருடம் அதிஷ்டவசமாக கால்லாற்றில் இருந்து ஒருவர் பாசாகி இருந்தார்). அந்தக்காலத்தில் என்னோடு சமமாக கிராமப்புறங்களில் படித்து நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய எத்தனையோ மாணவர்கள் கண்முன்னே சீரழிந்து சாதாரண சித்திபெறக்கூட முடியாமல் போனதைக் கண்ணால் கண்டுள்ளேன். அதைவிட இன்னும் எத்தனையோ மாணவர்கள் நல்ல பெறுபேறு பெறக்கூடிய சந்தர்ப்பம் இருந்தும், பொருளாதார சிக்கல் காரணமாக ஊரோடு இருந்து படிக்கக்கூடியதை மட்டும் படித்துவிட்டு, ஊரில் படித்து கலைப்பிரிவில் சாதித்த மாணவி/ மாணவன் என ஒரு இணையத்தளத்தில் வெளிவரும் போட்டோவோடு தங்கள் ஆசைகளை அடக்கிக்கொள்கிறார்கள். இங்கே விஞ்ஞான கணிதப்பிரிவைவிட மற்றத்துறைகளை குறைவாகச் சொல்லவில்லை. ஒரு திறமையான மாணவன் பொருளாதார நிலை காரணமாக தான் விரும்பிய துறையில் படிக்க முடியாமல், ஊரோடு இருக்கும் கலைப்பிரிவில் படிக்காமல், விஞ்ஞானப்பிரிவில் படித்து ஏதோவொரு பட்டப்படிப்புக்குத் தெரிவானால், அவனைவிட கொஞ்சம் குறைந்த திறமையுடைய மாணவருக்கு கலைப்பிரிவில் பல்கலைக்கழகம் கிடைக்குமே? இந்தப்பெரும் சமூக இடைவெளியைத்தான் முஸ்லிம்கள்



சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அவர்கள் ஊரிலேயே அவர்களுக்கு ஒரு பாடசாலையை விருத்தி செய்து வைத்துள்ளார்கள். நாம் கிறிஸ்தவம், இந்து என அடிபட அவர்கள் உங்கள் பாடசாலையே வேண்டாம் எனக் காறித்துப்பி விட்டு தங்களுக்கென ஒரு பாடசாலையை உருவாக்கிக்கொண்டு இருக்கிறார்கள். படுவான்கரையில் இருக்கும் நூற்றுக்கணக்கான ஊர்களுக்குப் பொதுவாக ஒரு தேசிய பாடசாலையை உருவாக்க முடியாத முதுகெலும்பு இல்லாதவர்களை, படித்த ஆட்களுக்கு வாக்குப்போடவேண்டும், வீட்டுக்கு வாக்குப்போடவேண்டும் என்று அடிமாட்டுச் சிந்தனையில் மூளைகெட்ட இனம்போல நாம் தலைவர்களாக்க, முஸ்லிம்களோ அவர்களின் ஒன்றிரண்டு ஊர்களுக்கு ஒரு பெரியபாடசாலையை உருவாக்கும் வல்லமை உடைய தலைவர்களை உருவாக்கி வைத்துள்ளார்கள்.

இலங்கையின் கல்வி முறைமையில் ஒருவரும் இன்னொருவரின் கல்வி உரிமையை அவ்வளவு ஈசியாக பறித்துவிட முடியாது. கல்வியில் இனவாதமும் கூடாது. பொறாமையும் கூடாது. போட்டிதான் வேண்டும். ஆகவே இனியாவது முஸ்லிம்கள் முன்னேறுகிறான் என்று பொறாமையில் கக்குவதைவிட்டு, அவர்களைப்போல நாமும் முன்னேற வேண்டும் என்ற போட்டியை எம் மாணவர்களுக்கு விதைப்போம். அதற்கான சூழலை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் விதமாக, கிறிஸ்தவர்கள், இந்துக்கள் என்று மாணவர்களை பாகுபடுத்துவதை நிறுத்துவோம். அதைவிட முக்கியமாக சொந்தமாக மூளையுள்ள, ஒரு மகாவித்தியாலத்தையாவது தேசிய பாடசாலையாக்குவதற்குரிய ஒரு சின்ன விடயத்தையாவது செய்யக்கூடிய ஒரே ஒரு தலைவரையாவது உருவாக்குவோம்.

---

தொடர்ச்சி...

## ராஜபக்ஷ இனவாதமாகப் பேசிக் குழப்புகிறார்’ - சம்பந்தர்



‘மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய பேச்சுக்கள் பற்றிய விபரங்கள் சர்வதேச நாடுகளுக்கும் நன்கு தெரியும்.அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை புறக்கணித்து ஒழித்து ஓடியது யார் என்பது தொடர்பாக சர்வதேச நாடுகளுக்குத் தெரியும். இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை குழப்பியது என மகிந்த ராஜபக்ச எவ்வாறு கூற முடியும்’ என சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

‘மகிந்த ராஜபக்ச உலகத்துக்குப் பொய் சொல்கின்றார். அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களின்போது என்ன நடந்தது என்ற உண்மையை மகிந்த ராஜபக்ச பகிரங்கமாகச் சொல்ல வேண்டும்.

தமிழ் மக்களின் எதிர்காலத் தீர்வுக்காக, எந்தத் தரப்புடனும் பேச தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக உள்ளது. மகிந்த ராஜபக்சவினால் அரசியல் தீர்வை ஏற்படுத்த முடியாது.

புதிய அரசியல் யாப்பு விவகாரத்தில் மகிந்த ராஜபக்ச ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும். ஆனால் மகிந்த ராஜபக்ச இனவாதமாகப் பேசி மக்களைக் குழப்புகிறார்’ என்று சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 22

## க.பொ.த. (உ/த) – புதிய பாடத்திட்டம் – தமிழ்

- மட்டுநகர் யுவன் -

புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாகத் தமிழ்ப் பாடத்துக்குரிய வினாக்களில் வினாத்தாள் Iக்குரிய கட்டாய வினாக்கள்பற்றிக் கவனம் செலுத்துவோம். முதலில் முதலாவது வினா அமைப்பைப் பார்ப்போம். இது மாதிரி வினா என்பதைக் கவனத்திற்கொள்க.

### பகுதி I

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து, அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்
இவணும் வாரா ரெவண ரோவெனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே.

(i) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
(ii) தலைவனைக் காணாது தவிக்கும் தலைவியின் மனநிலையை எடுத்துக்காட்டுக.
(iii) சங்க கால அகத்திணை மரபில் கருப்பொருளின் முக்கியத்துவத்தை விளக்குக.

(ஆ) கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயா
னுங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான்.

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினைக் கூறுக.
(ii) "உங்கள்குலத் தனிநாதன்" - இங்கு சிறப்பிக்கப்படுபவர் யார்? எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறார்?
(iii) இங்கு கையாளப்பட்டுள்ள உவமையை எடுத்துக்காட்டி விளக்குக.

(12 + 12 = 24 புள்ளிகள்)

பயிற்சிக்காக மேலும் ஒரு வினா தரப்படுகின்றது.

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து, அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றிமறந் தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினைக்கே.

(i) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
(ii) தோழி, எவற்றைக் கையாண்டு தன் கருத்தை வலியுறுத்துகிறாள்?
(iii) கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினைக்கே. - இதில் வந்துள்ள உவமையை விளக்குக.

(ஆ) ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
வேழமை வேடனி றந்தில னென்றெனை யேசாரோ.

(i) இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினைக் கூறுக.
(ii) குகன் பற்றிய உமது மனப்பதிவைக் குறிப்பிடுக.
(iii) இராமனுடனான நட்பைக் குகன் எப்படிப் பார்க்கிறான்?

(12 +12 = 24 புள்ளிகள்)

## கல்விதான் வாழ்க்கை

- யூனா

கல்விக்குக் கரையில்லை; கண்ணுண்டு
கற்றால் வாழ்க்கையில் சுகமுண்டு
அல்லெனும் அறியாமை போக்கும் - ஆகா
அதுவே வாழ்க்கையைத் தூக்கும்
பொல்லாத நிலைகளை மாற்றும்
பொறுப்பாக வாழ்க்கையை ஏத்தும்
இல்லாதன சொல்லாது நம்மை - நிதம்
இழிவே இல்லாது காக்கும்



# கற்போம்

## உயிர் அங்கிகளின் மூலக உள்ளடக்கம்

குணம் சவரிராஜா

02 தொடர்ச்சி...

24. அங்கிகளில் காணப்படும் பின்வரும் இயல்புகளுக்கு உதவும் நீரின் பண்புகளைத் தருக.
   1. உயிரிரசாயனத் தாக்கங்கள் நடைபெறும் முதலுருவின் ஊடகம்.
   2. சிறந்த கரைப்பான்
   3. கலங்களில் ஏற்படும் வீக்கம்
   4. நீர்வாழ் பூச்சிகளின் வாழிடம்
   5. பதார்த்தங்கள் உள்ளெடுக்கப்படலும் கொண்டுசெல்லலும்.
   6. வெப்ப மாற்றங்கள் தடுக்கப்படல்
   7. உடல் மேற்பரப்பைக் குளிர்வித்தல்
   8. நீர்நிலைகள் உறைவதைத் தடுத்து அங்கிகளைத் தப்பிப்பிழைக்க வைத்தல்.

   1. அறை வெப்பநிலையில் திரவமாகக் காணப்படுதல்.
   2. நீரின் முனைவுத்தன்மை
   3. நீரின் உயர்ந்த ஒட்டற்பண்பு, பிணைவு விசைகள்.
   4. உயர் மேற்பரப்பு இழுவிசை
   5. உயர் ஒட்டற்பண்பு, பிணைவு விசைகள்
   6. நீரின் உயர் தன்வெப்பக் கொள்ளளவு.
   7. நீரின் உயர் ஆவியாதலின் மறை வெப்பம்
   8. நீரின் உயர் உருகலின் மறை வெப்பம்.

### அங்கிகளின் பிரதான சேதனச் சேர்வைகளின் இரசாயன இயல்பும் தொழில்களும்.

25. அங்கிகளில் காணப்படும் நான்கு பிரதான சேதனச் சேர்வைகளைப் பெயரிடுக.
   - காபோவைதரேற்றுகள்
   - புரதங்கள்
   - இலிப்பிட்டுகள்
   - நியூக்கிளிக் அமிலங்கள்

26. புவியில் காணப்படும் மிகப் பெருமளவான சேதனச் சேர்வைக் கூட்டம் காபோவைதரேற்றுக்களாகும். காபோவைதரேற்றுகளின் மூலக உள்ளடக்கம் யாது?
- பிரதான மூலக உள்ளடக்கமாக ஊஇ ர் மற்றும் மு உள்ளது.
- காபனின் ஐதரேற்றுக்களான இவை, நீரில் உள்ளது போன்றே H : O சமம் 2 : 1 என்ற விகிதத்தில் கொண்டவை.
- பொதுவான சமன்பாடு $C_x (H_2O)$ல ஆகும்.

27. காபோவைதரேற்றுகளின் பிரதான கூட்டங்களைப் பெயரிடுக
- ஒருசக்கரைட்டுகள்
- இருசக்கரைட்டுகள்
- பல்சக்கரைட்டுகள்

28. ஒரு சக்கரைட்டுகள் எனப்படுபவை யாவை?
- $(CH_2O)_n$ என்ற பொதுவான மூலக்கூற்றுச் சூத்திரத்தையுடைய மிக எளிய வடிவமான காபோவைதரேற்றுக்கள் ஒருசக்கரைட்டுக்கள் ஆகும்.
- இதில் C ஆனது 3 – 7 வரை வேறுபடும்.
- எல்லா ஒருசக்கரைட்டுக்களும் தாழ்த்தும் வெல்லங்களாகவும், நீரில் கரையக்கூடியனவாகவும், பளிங்கு வடிவில் காணப்படுபவையும் ஆகும்.

29. ஒருசக்கரைட்டுக்கள் எந்த அடிப்படையில் பெயரிடப்படுகின்றன?

1. காபன் அணுக்களினது எண்ணிக்கையின் அடிப்படையில் அவை பின்வருமாறு பெயரிடப்படுகின்றன.
- 3C -திரையோசுக்கள். உ-ம் கிளிசரல்டிகைட்டுகள் (பொஸ்போகிளிசரல்டிகைட் திரையோசின் ஒரு பெறுதியாகும்)
- 4C -ரெற்றோசுக்கள் . உ-ம். எரித்திரோஸ் (இயற்கையில் அரிது)
- 5C -பெந்தோசுக்கள். உ-ம். இறைபோஸ், டீஒட்சிறைபோஸ், றிபுலோஸ் (சுரபீ றிபுலோசின் ஒரு பெறுதியாகும்)
- 6C -எட்சோசுக்கள். உ-ம். குளுக்கோஸ், பிரக்டோஸ், கலற்றோஸ்.

2. காபோனில் கூட்ட வகையின் (கீற்றோ, அல்டோ) அடிப்படையில் அவை பின்வருமாறு பாகுபாடு செயய்யப்படுகின்றன.
ய) அல்டோசுக்கள் - குளுக்கோஸ், கலற்றோஸ்
டி) கீற்றோசுக்கள் - பிரக்டோஸ்

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# புலம் பெயர் தமிழர்களின் நிதியில் புற்தரை கிரிக்கெட் மைதான இரண்டாம் கட்ட பணிகளுக்கான ஒப்பந்தம்



## 'மட்டக்களப்பில் சகல வசதிகளுடன் கூடிய அரங்கு அமைக்கப்படுகிறது' : புவனசிங்கம் வசீகரன்















கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக மட்டக்களப்பில் நிர்மானிக்கப்பட்டு வரும் புற்தரையிலான கிரிக்கெட் மைதானத்தின் இரண்டாம் கட்ட பணிகளுக்கான ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாதிடப்பட்டது.

கிழக்கிலங்கையில் முதல் தடவையாக புற்தரையிலான கிரிக்கெட் மைதானம் ஒன்று மட்டக்களப்பில் அமைக்கப்பட்டு வருவதை நாம் யாவரும் அறிவோம். இம்மைதான முதற்கட்ட பணிகள் தற்காலிகமாக தடைப்பட்டு இருந்த போதிலும் இப்பணிகளை மிக விரைவில் முடிக்கப்படுவதற்காக செயற் திட்டங்கள் துரித கதியில் நடைபெற தொடங்கியுள்ளன. இதன் இரண்டாம் கட்ட பணிகளை ஆரம்பிக்கும் நோக்குடன் ஒரு ஒப்பந்தமே இன்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது இவ்வொப்பந்தத்தில்



புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் சார்பாக திரு.புவனசிங்கம் வசீகரன் அவர்களும் Arch - Triad Consultants (Pvt) Ltd (ஆர்ச்-ரைட் கென்சல்டன் பிறைவட் லிமிட்டெட்டின்) நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியுமான (CEO) திரு.ராஜு சிவராமும் 05.02.2019 அன்று கொழும்பில் Arch - Triad Consultants (Pvt) Ltd தலைமையக காரியாலத்தில் வைத்து கைச்சாதிட்டனர். இதன் போது கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் கொழும்பு பிரதிநிதி திரு. மல்கம் டிலிமா அவர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவ் இரண்டாம் கட்ட பணிகளுக்கென மொத்தம் 250 மில்லியன் ரூபாய் செலவிடப்படவுள்ளதாகவும் முதல் கட்டமாக 50 மில்லியன் ரூபாய்களுக்கான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் திரு.புவனசிங்கம் வசீகரன் தெரிவித்துள்ளார். இதன் போது மிக முக்கியமாக செய்யப்படவுள்ள வேலைகள் பற்றியும் அவர் விவரித்தார்

- கிரிக்கெட் வீரர்கள் தங்கி இருக்க கூடியவாறு சகல வசதிகளுடன் கூடிய அறைகள் நிர்மானித்தல்
- கிரிக்கெட் வீரர்கள் உடற்பயிற்சி செய்யக்கூடிய (GYM ROOM) அறைகளை உருவாக்குதல்
- கிரிக்கெட் வீரர்கள் கலந்துரையடக் கூடியதும் ஊடகவியளாளர்கள் சந்திப்புக்கென மண்டபம் உருவாக்குதல்
- கிரிக்கெட் முகாமையாளர்களுக்கான அறை அமைத்தல்
- நடுவர்களுக்கான அறை அமைத்தல்
- வெளி இடங்களில் இருந்து வருகை தருபவர்கள் தங்கி செல்ல கூடியவாறு 30 வீரர்கள் தங்க கூடிய சகல வசதிகளும் உள்ள தனி அறைகள் உருவாக்குதல்
- அத்துடன் பார்வையாளர் அரங்கமும் அமைத்தல்

Arch - Triad Consultants (Pvt) Ltd இந்நிறுவனம் இலங்கையிலும் தென் இந்தியாவிலும் கட்டிட நிர்மானப்பணிகளை சிறப்பாக செயற்பட்டதை அவதானித்தே இவர்களுடன் இவ்வொப்பந்தத்தை கைச்சாத்திட்டுள்ளோம் இவர்கள் 72 வாரங்களில் இப்பணியை பூர்த்தி செய்து தருவதாக உறுதியளித்துள்ளதாகவும் குறிப்பிட்டு ஏற்கனவே தடைப்பட்ட இருந்த முதற்கட்ட பணிகள் மிக விரைவில் முடிக்கப்டுவதற்காக பணிகள் துரித கதியில் நடைபெறுவதாகவும் தெரிவித்தார். மட்டக்களப்பில் உள்ள கிரிக்கெட் வீரர்களை இனங்கண்டு தேசிய அணியில் இணைப்பதற்காக மட்டக்களப்பு கோட்டைமுனை விளையாட்டு கிராமம் முன்னெடுக்கும் இச்செயற்பாட்டிற்கு புலம் பெயர்ந்து வாழும் தழிழர்கள் என்கின்ற முறையில் நன்றிகளை தெரிவிப்பதுடன் இம்மைதான அமைப்பிற்கு புலம் பெயர்து வாழும் தழிழர்கள் உதவி செய்ய கிடைத்த சந்தர்ப்பத்திற்கும் நன்றி தெரிவித்தார்.


## எமக்கான ஒரு சினிமாவை நோக்கி...



எமக்கான "சினிமா" ஒன்றை வளர்ப்பதற்கு உதவும் வகையில் "அரங்கம்" நிறுவனத்தின் முயற்சியில் தயாரிக்கப்படவுள்ள திரைப்படத்தில் நடிக்க மற்றும் சினிமாவின் ஏனைய துறையில் பணியாற்ற கலைஞர்கள் தேவைப்படுகிறார்கள்.

ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
நேர்முக நடிகர் மற்றும் கலைஞர் தேர்வுக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படும்.
E-MAIL : arangamcinema@gmail.com

# மட்டு மாநகரசபை

## மக்களோடு இணைந்து அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல்

அன்பழகன் குரூஸ் (JP) M.A, P.G.Dip in Edu, Dip in LG.
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்



ஒரு ஊள்ளூராட்சி மன்றம் என்பது மக்களோடு இணைந்து செயற்பட வேண்டும். மக்களை இணைத்துச் செயற்பட பல வழிமுறைகள் உள்ளன. அதிலோன்று அபிவிருத்தித் திட்டம் தயாரித்தலாகும். அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதில் மக்கள் பங்களிப்பு மிக அவசியமானது. ஒரு அபிவிருத்தி வேலைத்திட்டம் நிலைத்திருந்து பயன்படவேண்டுமாயின் அது மக்களால் அடையாளப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். ஏனெனில் மக்களுக்கு வேண்டியது எது என்பதனை மக்களே அறிவர்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் வழிகாட்டலுடன் ஆசிய மன்றத்தின் தொழில்நுட்ப ஆலோசனைகள் பெறப்பட்டு அடுத்துவரும் நான்கு ஆண்டுகளுக்கான (2019 – 2022) அபிவிருத்தி திட்டத்தினை மக்களோடு இணைந்து தயாரிக்கும் நடவடிக்கையை மட்டக்களப்பு மாநகரசபை மேற்கொள்ளவுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டமானது முதலில் வட்டார ரீதியாகத் தயாரிக்கப்பட்டு, பின்பு முழு மாநகரசபைக்குமாக ஒன்றிணைத்து நான்கு ஆண்டுகளுக்கான அபிவிருத்தித்திட்டமாகத் வெளிவரும். மட்டக்களப்பு மாநகர சபையின் கீழ் உள்ள 20 வட்டாரங்களுக்கும் கௌரவ மாநகர முதல்வர் திரு. தி. சரவணபவான் தலைமையில், ஒவ்வொரு வட்டாரங்களிலும் அந்தந்த வட்டாரங்களின் கௌரவ மாநகர உறுப்பினர்களில் பிரசன்னத்துடன் வட்டாரத்திலுள்ள கிராம சேவையாளர் பிரிவில் வாழும் மக்கள் தமது அபிவிருத்தி தொடர்பான பொதுத் தேவைகளை முன்வைத்து, அவற்றை பயன்பாடு மற்றும் அவசியத்தின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தி முதலில் வட்டார அபிவிருத்தித் திட்டங்கள் (WLDP - Ward level Development Plan) தயாரிக்கப்படவுள்ளன.

இவ்வாறு வட்டார அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதும், அவற்றில் முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தித்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவை ஒன்றிணைக்கப்பட்டு, பின்பு முன்னுரிமைப்படுத்தப்பட்டு மட்டக்களப்பு மாநகர சபைக்கான நான்கு ஆண்டு அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படும் (LAPDP – Local Authority Participatory Development Plan).

இந்த அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்படுகின்ற போது மக்கள் முன்வந்து, தமது கருத்துக்களை தெரிவித்து, தமது கிராமங்களுக்கான தேவைகளை அடையாளங்காட்ட முன்வர வேண்டும். மக்களுக்குத்தான் தெரியும் அந்தந்த கிராமங்களில் உண்மையான தேவை என்ன என்பது. இவற்றினை நிறைவேற்ற மக்கள் ஒன்றிணைய வேண்டும்.

இந்த அபிவிருத்தித் திட்டமானது மட்டக்களப்பு மாநகர சபைக்கு மாத்திரமன்றி வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான வழிகாட்டல்களை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் LDSP - Local Development Support Project எனும் செயற்றிட்டத்தின் 'செயற்றிட்ட ஒருங்கிணைப்பு அலகு' (Project Coordinating Unit) முன்னெடுத்து வருகின்றது.

## 'மட்டக்களப்பு தனியார் கல்வி நிலைய வசதிகள் குறித்து பெற்றோரும் அக்கறை காட்ட வேண்டும்'



மூன்று மாதகால அவகாசம் கொடுத்திருந்தும் மட்டக்களப்பு மாநகர பகுதிக்குள் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் பல மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மாநகர முதல்வர் தியாகராசா சரவணபவன் வருத்தம் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் சுகாதாரம், பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்யும் நோக்கில் மாநகர எல்லைக்குள் இருக்கும் தனியார் கல்வி நிலையங்களில் திடீர் சோதனைகளை மாநகர சபைக்குழு அண்மையில் மேற்கொண்டது. மாநகர முதல்வரின் பணிப்பின் பேரில் இந்தக் கல்வி நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

மாணவர்களின் சுவாத்தியமானதும், பாதுகாப்பானதுமான கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படுகின்ற தனியார் கல்வி நிறுவனங்களே பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

குறிப்பாக ஆண், பெண் மாணவர்களுக்கான தனியான மலசல கூட வசதிகள், சுத்தமான குடிநீர் வசதிகள், கற்பித்தல் நடைபெறும் இடத்தில் போதுமான காற்றோட்டம், வெளிச்சம், இருக்கை வசதிகள், முறையான கழிவகற்றல் முகாமைத்துவம், மாணவர்களுக்கான வாகன தரிப்பிட ஏற்பாடுகள் மற்றும் கட்டண ஒழுங்குகள் என பல விடயங்கள் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டன.

கடந்த வருடம் தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் அடிப்படையில், தமது கல்வி



நிலையங்களில் கல்வி பயில வரும் மாணவர்களின் அடிப்படை சுகாதார வசதிகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்யக் கூடிய வகையில் கல்வி நிலையங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும் என உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு, அவற்றை நிவர்த்தி செய்ய கால அவகாசம் கொடுத்தும் பல தனியார் கல்வி நிலையங்கள் அவற்றை கருத்தில் கொள்ளாது வகுப்புகளை நடாத்துவதாக பெற்றோர் மற்றும் மாணவர்களால் வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு ஏற்ப இந்த சோதனை நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

அத்துடன் மாணவர்களின் வசதியான கற்றல் செயற்பாடுகளையும் அவர்களின் நலன்களையும் கருத்தில் கொள்ளாது செயற்படும் கல்வி நிலையங்கள் அனைத்தும் இன்னும் ஒரு மாத

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## இதுவும் ஒரு நல்ல ஐடியா



மாநகரசபை அண்மைக் காலமாக மாணவர்கள், சிறார்களின் நலனை முன்னிட்டு இலவச நீச்சல் பயிற்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது. சிறுவர்களின் உடற் கல்வியை மேம்படுத்தும் முகமாக ஏன் சிறுவர் சிறுமியருக்கு நாடகம் நடனம் மற்றும் நடனத்துடன் கூடிய



உடல்பயிற்சி (Zumba fitness) சாலைகளை அமைத்து சிறுவர்களின் வினைத்திறனைக் கூட்டலாமே.

லியோண்

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது


NIRUTHA
HOTEL
NIRUTHA
Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
Tel: +94652054444 Fax:+94652054092
UK Hotline: +447850927964
Email: hotelnirutha@yahoo.com
Visit: www.hotelnirutha.com
அரங்கம் செய்திகளுக்கான
ஆதரவில் கைகோர்ப்போம்' -
ஹொட்டல் நிருத்தா
Hotline: +94 717 412 292


NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY
Are you 18+ and have GCSEs or work experience?
Do you have A levels but missed your place at university?
Foundation Degree Business (London Metropolitan University)
Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
HND Business (Pearson)
HND Hospitality Management (Pearson)
BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)
Student Finance Available
Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

# விளையாட்டு



## மட்டுநகரில் கால்பந்து விளையாடி, விளையாட்டு அதிகாரியாக வளர்ச்சியுற்ற வே.ஈஸ்பரன்



து.கௌரீஸ்வரன்

மட்டக்களப்பில் பல்வேறு விளையாட்டுக்களிலும் பிரகாசித்த பலரும் பல்வேறு உயர் பதவிகளைப் பெற்றுத் தமது ஆளுமைத் திறனை வெளிப்படுத்தியுள்ளார்கள். இதில் கால்பந்தாட்டம் ஆடிய வீரர் ஒருவர் தான் கால்பந்தாட்டம் ஆடிய மாவட்டத்திலேயே மாவட்ட விளையாட்டு அதிகாரியாக வளர்ச்சி கண்டுள்ளார் என்பதற்கான ஓர் எடுத்துக் காட்டாக தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு.வே.ஈஸ்பரன் அவர்களைக் காண முடிகின்றது.

திரு.வே.ஈஸ்பரன் அவர்கள் மட்டக்களப்பு முகத்துவாரத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர். மட்டக்களப்பு அமிர்தளி பாடசாலையிலும், மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் கல்வி கற்றவர். தான் பிறந்து வளர்ந்த முகத்துவாரத்தில் லைற்ஹவுஸ் கழகத்தின் கால்பந்தாட்ட வீரனாகத் தனது இளமைக் காலத்தில் ஜொலித்தவர் உள்ளூர் செவண சைட் போட்டிகளில் லைற்ஹவுஸ் கழகத்திற்காக விளையாடி பலமுறை சிறந்த வீரனாக விருதுகள் பெற்றவர். 1990 களின் பின்னர் மட்டுநகர் பாடுமீன் கழகத்திற்காக விளையாடியவர். பாடுமீன் கழகத்தில் மூத்த கால்பந்தாட்ட வீரர்களான ரெட்ணா, ஜெயா, மகேசன், கெனடி, பெனாண்டோ போன்றோரிடம் முறையாகப் பயிற்சிகள் பெற்று முன்னணி வீரராகக் களமாடியவர்.

1990 களில் பாடுமீன் கழகத்தின் மகத்தான வெற்றிகளின் பங்குதாரனாகப் பிரகாசித்தவர். 1990 களில் பாடுமீன் கழகத்தின் நட்சத்திர கால்பந்தாட்ட வீரன் சுதாகரன் அவர்கள் போட்ட பல கோல்களுக்கான பக்கத்துணையாளனாக இவர் கால்பந்தாட்டம் ஆடினார். அதாவது ஈஸ்பரன் கோணர் அடித்தால் அதனைச் சுதா கோலாக்குவது அக்காலத்தில் பெரும்பாலும் நடந்தேறுவதைக் காண முடிந்தது. அந்தளவு ஈஸ்பரனின் மூலை உதை கச்சிதமாக அமைந்திருக்கும். இதனால் எதிரணியினர் பாடுமீன் அணிக்கு மூலை உதை வாய்ப்பை வழங்கக் கூடாது என ஆடுவதைக் கண்டிருக்கின்றோம்.

இவ்விதமாக 1990 களில் கால்பந்தாட்டத்தில் முன்னணி வீரனாகவும் ஏனைய சுவட்டு மைதான விளையாட்டுக்களின் வீரனாகவும் தனது திறமைகளை வெளிக்காட்டிய ஈஸ்பரன் அவர்கள் போதிய கல்வித் தகுதியினையும் பெற்றிருந்தமையால் 1992 ஆம் ஆண்டுகளின் பின்னர் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிருவாகப் பரவலாக்கலின் போது பிரதேச விளையாட்டு உத்தியோகத்தராக நியமனத்தைப் பெற்றுக்கொண்டார்.

விளையாட்டு உத்தியோகத்தராகிய பின்னர் தனது தொழில் வாண்மையினையும் கல்வித் தகைமையினையும் மேலும் விருத்தி செய்யும் நோக்குடன் தான் சார்ந்த விளையாட்டுத் துறையில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டார். ஆசிய கால்பந்தாட்டச் சங்கத்தின் கால்பந்தாட்டப் பயிற்சியாளருக்கான "வி" தரச் சான்றிதளையும், கால்பந்தாட்ட நடுவருக்கான சான்றிதளையும் பெற்றுக் கொண்டார்.

இத்துடன் விளையாட்டுத்துறை சார்ந்த சர்வதேச நிகழ்ச்சிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் பங்குபற்றியுமுள்ளார். ஒரு பட்டதாரியாகவும் தனது கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டார். சேவை மூப்பும், சேவைக்காலத்தில் இவரால் வெளிக்காட்டப்பட்ட துறைசார் நல்லடைவுகளும் இவரை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தராக உயர்வடையச் செய்துள்ளது.

இவருடைய பொறுப்பின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட அணி தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்ட 2000 – 2010 காலப்பகுதியில் மட்டக்களப்பு கால்பந்தாட்ட அணி மாகாண மட்டத்தில் சம்பியனாகவும் தேசிய மட்டத்தில் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்க பதிவாகும். சிறந்த வீரர்களை இனங்கண்டு தெரிவு செய்து அவர்களது திறன்களைச் சரியாகப் பெற்றுக் கொள்ளும் வல்லமைமிக்க ஒரு கால்பந்தாட்டப் பயிற்றுனராக இவர் தனது ஆற்றுகைகள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் விழாக்களை, நிகழ்ச்சிளை திறம்பட ஒழுங்கமைத்து கச்சிதமாக நடத்தும் ஆற்றலும் ஆளுமையும் உள்ள ஒரு சிரேஸ்ட மாவட்ட உத்தியோகத்தராக இவர் இனங்காணப்பட்டுள்ளார். இவர் அம்பாறை மாவட்டத்தின் விளையாட்டு அதிகாரியாக கடமையாற்றிய போது அம்பாறை மாவட்டத்தின் விளையாட்டுப் பேறுகள் அதிகரித்தமையினை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

இவ்வாறாக ஆற்றலாலும், ஆளுமையினாலும் வளர்ச்சிகளை இனங்காட்டும் திரு வே.ஈஸ்பரன் அவர்கள் மட்டுநகரின் கால்பந்தாட்ட வீரனாக களமாடி அதனூடாகத் தனது ஆளுமைகளை விருத்தி செய்தவர் என்பது இன்றைய இளம் கால்பந்தாட்ட வீரர்களுக்கு ஒரு முன்னுதாரணமானது எனலாம்.

## புனித மிக்கேல் கல்லூரி வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி



மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி - தேசியப்பாடசாலையின் வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி வெபர் மைதானத்தில் அதிபர் பயஸ் ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்றது. இறுதி நிகழ்வில், மட்டக்களப்பு மறை மாவட்ட பேராயர் கலாநிதி யோசப் பொன்னையா, இராணுவத்தின் கிழக்குப்பிராந்திய கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் கே.பி. அருண ஜயசேகர உள்ளிட்ட அதிதிகள் அழைத்து வரப்படுவதையும். மாணவர்களின் உடற் பயிற்சிக் கண்காட்சியையும், கிழக்கு மாகாண கட்டளைத்தளபதிக்கு நினைவுச் சின்னம் அதிபரால் வழங்கி வைக்கப்படுவதையும் வெற்றிபெற்ற இல்லப் பொறுப்பாசிரியருக்கு மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர் வெற்றிக்கிண்ணம் வழங்கி வைப்பதனையும் படங்களில் காணலாம்.

## கூடைப்பந்து - புனித மிக்கேல் சாம்பியன்



மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்து சங்கத்தினால் நடத்தப்பட்ட 15 வயதுக்கு உட்பட்ட அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான கூடைப்பந்துச் சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி வெற்றி வாகை சூடியது.

அகில இலங்கை ரீதியில் 12 அணிகள் கலந்து கொண்ட இந்தச் சுற்றுப்போட்டியில் கொழும்பு டி. எஸ். சேனநாயக்க மகாவித்தியாலயம், வெஸ்லி கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, திருகோணமலை ஜோசப் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, தன்னாமுனை ஜோசப் கல்லூரி, மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு சிவானந்த கல்லூரி, மியான்மி கல்லூரி ஆகியவை உட்பட புனித மிக்கேல் கல்லூரியும் கலந்து கொண்டன.

அழைப்பு முறை அடிப்படையிலான இந்தச் சுற்றுப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் புனித மிக்கேல் கல்லூரி திருகோணமலை ஜோசப் கல்லூரியுடன் மோதி வெற்றிபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் கலந்து கொண்டார்

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

# 62 ஆவது ஆண்டில் சேனையூர் மத்திய கல்லூரி

## இன்னாள் நம் பொன்னாள்
## உயிருக்கு நிகர் நம் உணர்வுக்கு மொழி
## 11.02.1957-11.02.2019

சேனையூர் மத்திய கல்லூரி தன் வைரவிழாவை கடந்து, மகாவித்தியாலயமாகி, பொன் விழாவை கடந்த ஆண்டில் நிறைவு செய்து இன்னொரு அறுபத்தியிரண்டாவது ஆண்டை கொண்டாடி மகிழ்கிறது. பழைய மாணவர்களாகிய எமக்கு இது பெருமை கொள்ளும் நாள். சேனையூர் மத்திய கல்லூரியில் படித்த, படிக்கின்ற அனைவரும் மனம் நிறை மகிழ்வுறும் நாள். எல்லா வழிகளிலும் நம் கல்லூரிக்கு பெருமை சேர்ப்போம்.



ஒரு சிறு கொட்டிலில் ஆரம்பமான நம் பாடசாலை இன்று பெரு விருட்சமாய் கிளை பரப்பி, அடுக்கு மாடிக்கட்டிடங்களும் கலை அரங்கும் தொழில் நுட்ப கூடமும் விஞ்ஞானம் கூடம், நூலகம் மாணவர் விடுதி, மிகப் பெரிய விளையாட்டு மைதானம் என காண்போர் வியக்கும் பிரமாண்டத்தை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. ஒரு கிராமத்தில் இப்படி ஒரு பாடசாலையா?

சேனையூர் மத்திய கல்லூரி திருகோணமலை மாவட்டத்தில் வியத்தகு சாதனைகளால் கொட்டியாரத்துக்கு பெருமை சேர்த்த கல்லூரி. சகல மட்டத்திலும் தன் திறனை வைர வரிகளால் நிலை நிறுத்திய ஒரு கல்வி வரலாறு அதற்கு உண்டு. இன்று சர்வதேச மட்டத்திலும் அதன் பெயர் அங்கு படித்த முன்னாள் மாணவர்களால் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ஒரு கிராமத்துப் பாடசாலைக்கு 60 ஆண்டுகள் என்பதும் அது அறுபது ஆண்டுகளில் ஒரு மத்திய கல்லூரியாக தரம் உயர்ந்து தலை நிமிர்ந்து நிற்பது என்ற வரலாறு அபூர்வமான ஒரு சாதனை என்பதை நாம் மறந்து விட்டோமா?

சேனையூர் மத்திய கல்லூரியின் வரலாறு ஒரு வைரம் பாய்ந்த போராட்ட வரலாறு. அந்த நாட்களில் தலைமை தாங்கி வழி நடத்திய அதிபர்களின் சாணக்கியமும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடனான சேவையும் பெற்றோர்களின் பெரும் ஒத்துழைப்பும் மாணவர்களின் விடா முயற்சியும் பல தடைகளை தாண்டி ஒரு வெற்றி வரலாறு படைத்தது நம் சேனையூர் மத்திய கல்லூரி.

இக் கல்லூரியில் படித்த பலர் கடந்த அறுபதாண்டுகளில் பல நூறு பேர் பட்டதாரிகளாகவும் பல அரசாங்க உத்தியோகம் வகிப்பவர்களாகவும் ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் கல்வி அதிகாரிகளாகவும், பொறியியலாளர்களாகவும் வைத்தியர் களாகவும் உயர் அதிகாரிகளாகவும் பணியில் உள்ளனர். தென்னமரவாடி முதல் வெருகல் வரை உள்ள தமிழ் மாணவர்களுக்கு எழுபதுகளின் பிற்கூறிலும் எண்பதுகளிலும் கல்வி மறு மலர்ச்சிக் கான ஊற்றுக் கண்ணாய் இருந்து வழி காட்டியது சேனையூர் மத்திய கல்லூரி.

திருகோணமலையில் பணியாற்றிய கல்வி அதிகாரிகளின் பிள்ளைகள் கூட இங்கு வந்து படித்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பதிவு.

1957 மாசி மாதம் 11ஆம் திகதி இன்றைய சேனையூர் மத்திய கல்லூரி "சேனையூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" எனும் பெயருடன் சேனையூர் கிராம முன்னேற்றச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு அரசுக்கு பாரம்



கொடுக்கப்பட்டதாக அறிய முடிகிறது. தலைவராக திரு ஆ.கணபதிப்பிள்ளை அவர்களும் செயலாளராக திரு.க மார்கண்டு அவர்களும் பொருளாளராக திரு.தங்கத்துரை அவர்களும் போசகராக திரு.க.நா. நடராஜபிள்ளை உடையார் அவர்களும் பொறுப்பாக இருந்து பாடசாலையின் ஸ்தாபக பெருமைக்குரியவர்களாக மதிக்கப்படுகின்றனர். அவர்கள் இட்ட விதையே இன்று பல்லாயிரம் மாணவர்களை உருவாக்கிய உயர் கல்விக் கூடமாக தலை நிமிர அடிப்படையாக அமைந்தது.

ஆரம்பத்தில் அறுபத்து ஏழு மாணவர்களை கொண்டே பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது தலைமை வாத்தியாராக திருமிகு.வே.ஞானமுத்து அவர்கள் பொறுப்பேற்று ஆரம்ப நடவடிக்கைகளை சிறப்பாக செய்ய, ஆறுமாதத்தில் அவர் மாற்றலாகிச் செல்ல, அந்த இடத்துக்கு நம் பெரிய அய்யா திருமிகு.செ.நடராசா அவர்கள் பொறுப்பேற்கிறார்.

ஆரம்பத்தில் சிறிய கொட்டில்களிலேயே பாடசாலை இயங்கியது சுற்றிவர வாகையும் பற்றைகளும் நிறந்த காடாகவே இருந்தது. அந்த காலங்களில் என் அப்புச்சியே அவருக்கு வலது கரமாக தொழிற்பட்டவர். அய்யாவின் பாலசிங்கம் என்ற குரல் அப்புச்சியை அந்த இடத்துக்கு கொண்டு வந்து விடும். பற்றையும் காடுமாய் இருந்த இடம் பசும் கல்விக் கூடமாய் மாறியது. பின் நாட்களில் ஒரு பள்ளிக் கூடம் எத்தகைய கட்டமைப்பு வடிவமைப்புக் கொண்டதாய் இருக்க வேண்டும் என்பதற்கான கட்டமைவு அமைக்கப்பட்டது.

(அடுத்த வாரம்)...

**பாலசுகுமார் சேனையூர்**
**மேனாள் முதன்மையர்**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

---

# பிரச்சினைகளுக்கு தற்கொலை ஒரு தீர்வல்ல

## நீர் தற்கொலை செய்வதால் 6 பேருக்குப் பாதிப்பு

ஒவ்வொரு ஆண்டும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் தற்கொலை செய்துகொள்வதாக உலக சுகாதார அமைப்பு (WHO) மதிப்பிடுகிறது.
உலகில் ஒவ்வொரு 40 நிமிடத்திலும் ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார். பாலின விகிதத்தில், தற்கொலை செய்து கொள்பவர்களில் 46.6% ஆண்கள், 12.8% பெண்கள் ஆவார்கள்.
ஒவ்வொரு வருடமும் தற்கொலை விகிதம் அதிகரித்து வருவது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும். உதாரணமாக, கடந்த நான்கு ஆண்டுகளில் தற்கொலை விகிதம் உலகம் முழுவதும் 60% அதிகரித்துள்ளது.

ஏன் இவ்வாறான தற்கொலைகள் நடைபெறுகின்றன?

மனஅழுத்தத்தின் உச்சமே தற்கொலையில் முடிகின்றது. பிரச்சினைகளை சமாளிக்க முடியாமல் அதை பார்த்து பயந்து ஓடி தற்கொலை செய்து கொள்கிறார்கள் பலர்.
பொதுவாக தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்துடன் இருப்பவர்களிடம் பேசி பார்த்தோமென்றால் அவர்களின் பதில் எனக்கு தற்கொலை செய்ய வேண்டுமென்று ஆசை இல்லை ஆனால் எனக்கு வாழ வழி தெரியவில்லை என்பதாக தான் இருக்கும். இது போன்ற ஒரு நிலையில் இருப்பவருக்கு ஒரு ஊன்று கோல் கிடைத்தால் போதும் அவர்கள் வாழ்வதற்கு.

உடல்நலக் குறைவு, திருமண வாழ்க்கையில் திருப்தியின்மை, கடன் தொல்லை, காதல் தோல்வி, பரீட்சைகளில் தோல்வி, போதை பொருட்களுக்கு அடிமை, இப்படி தற்கொலைக்கான காரணங்களை வரிசைப்படுத்தலாம். ஆனால் இவற்றில் ஒன்று கூட தீர்க்க முடியாத பிரச்சினை என்றல்ல. மன உறுதியும் தன்னம்பிக்கையும் உள்ள ஒரு நபரால் தற்கொலையை தடுத்து நிறுத்தமுடியும் என்பது மனநல மருத்துவர்களின் கருத்தாக உள்ளது.

பிரச்சினைகள் அதிகமாகும் போது மனஅழுத்தம் அதிகமாகும் அந்தச் சமயத்தில் மனதில் ஒரு வித வெறுமை தோன்றி வாழ்வதா சாவதா என்ற மனக்குழப்பத்தை ஏற்படுத்தும். எனக்கு யாரும் இல்லை எனக்கு வாழவும் வழி இல்லை என்றெல்லாம் மனதில் விரக்தியின் உச்சகட்ட எண்ணங்கள் தோன்றும். அந்த சமயத்தில் சுற்றி இருக்கும் எதைப் பற்றியும் யோசிக்காமல் ஒரு வினாடியில் எடுக்கும் முடிவு தான் தற்கொலை. ஆனால் அந்த ஒரு வினாடி நேரத்தை மட்டும் வெற்றிகரமாக கடந்து விட்டால் வாழ்க்கையில் பெரிய ஒரு மாற்றத்தை எதிர்கொள்ளலாம். தற்கொலையின் எல்லை வரை சென்று மரணத்தின் வாயிலை தொட்டு விட்டு வந்தவர்கள் பலர் ஒரு வினாடி தனக்கு ஏற்பட்ட மனமாற்றம் தன்னுடைய வாழ்க்கை பாதையை எப்படி மாற்றியது என்று தமது சொந்த அனுபவங்களை கூறியிருக்கிறார்கள். அவர்களில் பலர் சாதனையாளர்களாக உருவெடுத்திருக்கிறார்கள். ஒருவர் தற்கொலை செய்து கொள்ளும் போது அவரது பிரிவால் சராசரியாக ஆறு நபர்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள் என்பது ஒரு ஆராய்ச்சியின் முடிவு.

நல்ல நண்பர்களை தங்களுடன் வைத்திருப்பவர்கள் தற்கொலைக்கு முயல்வதில்லை. நல்ல நட்பு வட்டாரத்தை உருவாக்கி கொள்வது உளவியல் ரீதியாக உங்களுக்கு நன்மை என்று மனநல மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.
அதே சமயம் இன்னொரு கோணத்தில் பார்க்கும் போது சிறிய அளவிலான பிரச்சினைகளில் இருப்பவர்கள் தான் பெரும்பாலும் தற்கொலை செய்து கொள்கிறார்கள். உதாரணத்திற்கு உடல் உறுப்புக்களை இழந்த ஒரு ஊனமுற்ற நபர் வாழ்வதற்கான வழிகளை தேடி தன்னுடைய வாழ்க்கையை ஏதோ ஒரு வகையில் வாழப்பழகிக் கொள்கிறார். ஆனால் நோய்வாய்ப்பட்ட ஒருவர் இந்த வலியுடன் என்னால் வாழ முடியவில்லை என்று விரக்தியில் தற்கொலை செய்து கொள்கிறார்.
இதை அறியாமை என்பதா இல்லை முட்டாள்தனம் என்பதா? எதுவாக இருந்தாலும் தீர்வு தற்கொலை அல்ல.

தற்கொலைகளை தடுப்பதற்கான வழிகளை மேற்கொள்ளல்.

ஒரு உயிரையோ அல்லது மனித வாழ்வையோ காப்பாற்ற வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் உள்ளது. உங்கள் குடும்ப உறுப்பினர்களோ நண்பர்களோ உறவினர்களோ யாராக இருந்தாலும் அவர்கள் பிரச்சினையில் இருப்பதாகவோ அல்லது மனஅழுத்தத்தில் இருப்பதாகவோ உங்களுக்கு தோன்றினால் அவர்களை அலட்சியமாக விட்டு விடாதீர்கள். அப்படியான நபர்களை தனிமையில் விடாதீர்கள். உங்களுக்கு பிடிக்காதவராக இருந்தாலும் கூட கோபத்தை விட்டு அவர்களிடம் பேசுங்கள். அவர்களுக்கு ஆறுதலான உயிர்வாழ தூண்டக்கூடிய வார்த்தைகள் தேவைப்படலாம் ஆகவே உங்கள் பேச்சு அவர்களுக்கு ஒரு

தொடர்ச்சி... (பக்கம் -15 )

**சகி**

# மாண்பு பெற்ற மாபெரும் கலைஞன் கலாபூசணம் கா.பரசுராமன்



மட்டக்களப்பினைச் சேர்ந்த பறையிசைக் கலைஞரான திரு.கா.பரசுராமன் அவர்கள் இலங்கை கலாசார திணைக்களத்தினால் கலாபூசணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். காலஞ்சென்ற, பெயர் பெற்ற பறைமேளக் கலை வல்லுனரான கலாபூசணம் வையன் ஆனைக்குட்டியின் மருகனான இவர் ஆனைக்குட்டியைப் போல் பறைமேளக் கலையின் வித்துவங்களைப் பெற்றுள்ள முதுபெரும் கலைஞராவார்.

பறை தமிழரின் தொன்மையான வாத்தியம், இவ்வுலகில் தமிழரின் தொன்மையினை அடையாளப்படுத்தும் ஒரு முக்கியமான சான்றாதாரம், பறைமேளக் கலைஞர்கள் தமிழர் சமூகங்களின் மூத்த குடியின் வழிவந்தவர்கள், ஆனாலும் இத்தகைய தொன்மங்களையும் பெருமைகளையும் சாதி ஏற்றத் தாழ்வு எனும் ஆதிக்க வெறியினால் தட்டிக் கழிக்கும் மனோநிலை தமிழரிடையே வலுவாக வேர் கொள்ளச் செய்யப்பட்டுள்ளது. ஆதித் தமிழரும் அவர்களால் பாதுகாக்கப்பட்டு பயிலப்படும் ஆதித் தமிழ்க் கலையும் ஒடுக்கப்பட்டு சாதி ஆதிக்கத்தினால் அடக்கி, ஆளப்பட்டு வருகிறது.

இத்தகைய துரதிஸ்டம் விளைவிக்கும் சவால்களையெல்லாம் சகித்துக் கொண்டும், எதிர்த்துக் கொண்டும் ஆதித்தமிழ்க் கலையை அதன் உயிர்ப்புக் கெடாமல் பேணிக்காத்து முன்னெடுக்கும் மாபெரும் வித்துவம் மிக்க பறைமேளக் கலைஞர்களுள் ஒருவராக, திரு கா.பரசுராமன் அவர்கள் வாழ்ந்து வருகின்றார்.



ஒடுக்கு முறைகளும், சாதி ஏற்றத் தாழ்வும் மிகக் கொடூரமாக நிலவிய காலத்தினதும், நவீனமயமாக்கத்தின் பின்னர் உருவான புதிய சூழ்நிலைமைகளினதும் வெவ்வேறு அனுபவங்களினூடாகப் பயணித்த ஒரு மூத்த கலைஞனாக இவர் நம்மத்தியில் வாழ்கின்றார்.

வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு அனுபவங்களை தான் சாராத வெளிச் சமூகங்களிலிருந்தும், தான் சார்ந்த சமூகத்தின் உள்ளிருந்தும் எதிர்கொண்டு வாழ்ந்த இவர் பறைமேளக் கலையினை இழக்காமல் அதனூடாகப் பயணிப்பதில் மிகவும் உறுதியுடன் இயங்கி வருகின்றார்.

ஒடுக்கு முறைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான பின் காலனித்துவ, பின் நவீனத்துவ நோக்கிலான கலையாக்கச் செயற்பாடுகளுடனும், ஆய்வறிவு நடவடிக்கைகளுடனும் இணைந்து பணியாற்றுவதில் ஆர்வத்தினை வெளிக்காட்டிய மூத்த கலைஞனாக இவர் செயற்பட்டுள்ளார். உதாரணமாக கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச் செயற்பாட்டில் கூத்துக்களில் வரும் பறையறைவோன் பாத்திரத்தின் படைப்பாக்கத்தினை மீளுருவாக்கம் செய்த போது திரு கா.பரசுராமன் அவர்கள் மிகவும் முக்கியமான பங்கினை வகித்திருந்தார்.

இதேபோல் தமிழரின் தொன்மக் கலையான பறைமேளக் கலையின் இருப்பைக் காத்து அதனை முன்னெடுத்தலுக்கான சவால்கள் நிரம்பிய செயற்பாடுகளில் இவர் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார். குறிப்பாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையிலும், சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்திலும், மூன்றாவதுகண்



குழுவினாலும்; பறைமேளக் கலை தொடர்பான பிரக்ஞையுடன் முன்னெடுக்கப்படும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் திரு.கா.பரசுராமன் அவர்கள் முக்கியமான பங்கினை ஆற்றியுள்ளார்.

இரு தசாப்தங்களாக தொடரப்படும் மேற்படி நடவடிக்கைகள், கலைத்துறை சார்ந்த புதிய இளந் தலைமுறையினரிடையே, பறைமேளம் குறித்து பிரக்ஞைபூர்வமான அக்கறையினை, கருத்துநிலை சார்ந்தும், செயற்பாடுகள் சார்ந்தும் ஏற்படுத்தியுள்ளதுடன், செயல்முறை சார்ந்து ஆக்கபூர்வமான மாற்றங்கள் உருவாகுவதற்கான வழிகளையுந் திறந்து விட்டுள்ளது.

இந்த நீண்ட பயணத்தில் காத்திரமான பங்களிப்பினை வழங்கியுள்ள கலாபூசணம் கா.பரசுராமன் அவர்கள் மிகவும் முக்கியமான கலைஞராக விளங்குகின்றார்.

உலகப் பரப்பில் தமிழரும் அவர்தம் தொன்மைக் கலைகளும் பற்றிய அக்கறையுடன்... மாண்பு பெற்றுள்ள கலாபூசணம் கா.பரசுராமன் அவர்களை வாழ்த்தி மகிழ்வோம்.

**து.கௌரீஸ்வரன்**

---

# சங்கீத பூஷணம் திரு. நல்லதம்பி கணபதிப்பிள்ளை நினைவுகள்...

சங்கீத பூஷணம் திரு. நல்லதம்பி கணபதிப்பிள்ளை அவர்களின் முதலாம் வருட நினைவேந்தல் அன்னாரின் கல்லடி வாசஸ்தலத்தில் 06.02.2019 அன்று அமைதியான முறையில் நடைபெற்றது.

அன்னார் கடந்து வந்த பாதையை சற்று மீட்டுவோமானால் பூர்வீகத் தமிழர்கள் வாழும், வந்தாரை வாழ வைக்கும் தனிச்சிறப்பு மிக்க மட்டு மாநகரினை அண்மித்த நாவல் மரங்களால் நிறைந்த நாவலடி ஊரில் திரு. நல்லதம்பி திருமதி. நல்லம்மா தம்பதியினருக்கு 1919ம் ஆண்டு கார்த்திகை 11ம் நாளில் நான்காவது பிள்ளையாக பிறந்தார் சங்கீத பூஷணம் நல்லதம்பி கணபதிப்பிள்ளை.

தனது 16ம் வயதுகளில் கண்டி நகர் சென்று கர்நாடக சங்கீதத்தை கற்ற போதும் திருப்தி அடையாதவராய், 1946களில் இந்தியா சென்று பல சங்கீத வித்துவாண்களிடம் குருகுல முறையில்




கர்நாடக சங்கீதத்தை பயின்றார். பின்னர் அண்ணமாலை பல்கலைக் கழகத்தில் அனுமதி கிடைக்கப்பெற்று கர்நாடக சங்கீத வாய்பாட்டு பிரிவில் பட்டம் பெற்று ஈற்றில் சங்கீத பூஷணம் எனும் உயரிய விருதையும் பெற்ற பெருமைக்குரியவராவார்.

இந்தியாவில் பட்டம்பெற்ற பின்னர் சிதம்பர தில்லையம்பதி உட்பட பல்வேறு இடங்களில் நடைபெற்ற பிரசித்த இசைக்கச்சேரிகளில் பங்கு கொண்டு இந்தியாவிலேயே தனது தனித்திறமையை நிரூபித்தார். இந்தியாவில் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலப்பகுதியில் திராவிட முன்னேற்ற கொள்கைகளில் ஈர்க்கப்பட்டார்.

அக்காலங்களில் தலைவர் அண்ணாத்துரையுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். மேலும் சங்கீத சக்கரவத்தி தியாகராஜா பகவதருடன் இசை ரீதியான நட்புக் கொண்டிருந்தவருமாவார். இசையில் பட்டம் மற்றும் விருதுகள் கிடைத்த இவரை இந்தியாவிலேயே பணியாற்ற பல அரிய வாய்ப்புகள் கிடைத்தும் கூட தாய் நாட்டுப் பற்று காரணமாக நாடு திரும்பி சங்கீத ஆசான் எனும் பணியினை விரும்பி ஏற்று கல்விப்பணியுடன் சமூகப் பணியினையும் ஏற்று நடாத்தி வந்தார்.

திருமலை தென்னைமரவாடி வித்தியாலம், மட்/ வாகரை மகா வித்தியாலம், முதலைக்குடா மகா வித்தியாலயம், அரசடி மகா வித்தியாலயம் (தற்போது மகஜானக் கல்லூரி) போன்றவற்றில் பணியாற்றி இறுதியாக மட்/ கிரான் மகாவித்தியாலயத்தில் பணியாற்றி



ஓய்வு பெற்றார். இவரின் கடந்த கால இசைப் பயணத்தில் பல சங்கீத ஆசான்களை உருவாக்கியமை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இக்காலப்பகுதிகளில் தான் நாட்டுக்கூத்துகளில் சிறப்பு தேர்ச்சி பெற்ற 'அண்ணாவி' மாரின் உதவியுடன் தானும் சேர்ந்து தனது இசையை வழங்கி, நாட்டுக் கூத்து கலையினை தானும் சேர்ந்து மாணவர்களுக்கு கண்வழி செவிவழியாக பயிற்றுவித்தார். இதன் தொடர்ச்சியாக கிராமப்புறங்களில் பொது நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் திருவிழாக்கள் என பல நிகழ்வுகளில் கலையை நிகழ்த்தி நமது மண்ணின் பாரம்பரியத்தை போற்றி பாதுகாக்க அரும் பாடு பட்டார். பல்கலைகழகங்களில் நாடகமும் அரங்கியலும் எனும் பாட நெறி இல்லாத காலங்களிலேயே மேற்படி பாரம்பரிய நாட்டுக்கூத்து நிகழ்வுகளை நாடத்தி அதனை அடுத்த தலைமுறைக்கு சென்று சேர்க்க முனைப்பு சிறந்த சமூக தொண்டையே பிரதி பலிக்கின்றது.

தன்னிறைவு பொருளாதாரத்தில் நாட்டம் கொண்ட இவர் பல மேடைகளிலும் நிகழ்வுகளிலும் மனைப்பொருளாதாரத்தை வளர்க்கும் பொருட்டு பல சொற்பொழிவுகளை ஆற்றியிருந்தார். அதிலும் முக்கியமாக வீட்டுத்தோட்டத்தினை அமைக்க வேண்டிய விழிப்புணர்வுகளை கிராம மக்களிடம் சென்றடைய பல நிகழ்வுகளை ஏற்படுத்தியிருந்தார். இக்காலப்பகுதியில் தான் திரு. செல்லத்தம்பி திரு. கதிர்காமத்தம்பி திரு. சின்னத்தம்பி என்பவர்களுடன் சென்று பயிர் செய்கைக்கு பயன்படுத்தக் கூடிய ஓர் நன்னீர் குளத்தை கண்டறிந்தார். மேலும் இயற்கையான குளத்திற்கு இயற்கையாகவே அணைக்கட்டு போன்ற இடையே முறிந்த தரைத்தோற்றத்தைக் கொண்ட அமைப்பிற்கு அவர்கள் கட்டு முறிப்பு எனும் பெயரை சூட்டினர்.

**மதுராங்கி உதயகுமார்**

பாரளுமன்ற உறுப்பினர் திரு. மாணிக்கவாசகம் அவர்களின் உதவியுடன் அந்த இயற்கை குளத்தின் நீரை விவசாயிகளுக்கு நீர்ப்பாசனம் வசதியாக வழங்க அரும்பாடுபட்டார். பின்னாளில் இக்குளமே கட்டுமுறிப்புக் குளம் எனும் வரலாற்று சிறப்புமிக்க குளமாக மாறியது.

தான் மணம்புரிந்த ஊரான

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# சுதந்திரம்

நேற்று வெள்ளவத்தை மஸ்ஜிதில் ஜும்மா பயான் சுதந்திர தினத்தை முஸ்லிம்கள் கொண்டாடலாமா என்பதாக அமைந்தது. அநேகமாக ஜம்மியத்துல் உலமா மஸ்ஜிதுகளுக்கு அனுப்பிய சுற்று நிருபத்தில் இன்று ஜும்மா குத்பாவில் இந்த சப்ஜெக்ட்தான் பேசப்பட வேண்டும் என கோரி இருக்கலாம்.

நல்லிணக்கம் மற்றும் சக வாழ்வு (குப்ரியத்துடன்..??) என்பவற்றின் அவசியம் குறித்து பேசிய ஹஸரத், மக்கத்து ஆரம்ப நாட்களில் ரஸூலுல்லாஹ் இப்படித்தான் வாழ்ந்ததாக கூறினார்.

யூதப் பெண்மணி அழைத்த விருந்துக்கு சென்றதை ஒரு நல்லிணக்க செயலாக ஹஸரத் குறிப்பிடுகிறார். ஆனால் சுதந்திர தினத்தை கொண்டாடுவதை இதனுடன் எப்படி ஒப்பிடுவது?

குரைஷிகளின் ஏக தெய்வ வழிபாடும் ரஸூலுல்லாஹ் பிரசாரம் செய்த ஏகத்துவமும் ஒன்றுக்கொன்று நேரெதிரானது. மனித நேயப் பண்புகளுடன் இணங்கி நடந்த போதும், கொள்கை ரீதியாக நபிகளார் குப்ரியத்துடன் எந்த விட்டுக்கொடுப்பும் செய்யவில்லை.

இஸ்லாமிய வரம்புகளை மீறாமல் சுதந்திர கொண்டாட்டங்களில் ஈடுபட முடியும் என்று ஹஸரத் கூறுவதும் இடிக்கவே செய்கிறது. உருவப் படங்களை காட்சிப்படுத்த முடியாது என்று இஸ்லாம் கூறும் வேளையில் தேசிய கொடிகளை மஸ்ஜிதுகளில் ஏற்றுவது (வீடுகளில் கூட இவ்வாறு செய்ய மாட்டோம்), பேண்டு வாத்தியங்கள் இசைக்கப்படும் நிகழ்வுகளில் பங்கேற்பது, தேசிய கீதம் இசைக்கப்படும்போது எழுந்து நிற்பது இஸ்லாமிய வரம்புகளை மீறுவதாகாதா என்பது குறித்து எமதருமை உலமாக்கள் விளக்கம் தர வேண்டும். அத்துடன் அந்த கீதத்தில் சொல்லப்படும் "நமதலை நினதடி மேல் வைத்தோமே" என்ற வரிகள் ஷிர்க் இல்லை என்று சர்டிபிகேட் தர வேண்டும்.

இணங்க முடியாத இந்த விடயங்களில் இணக்கம் எப்படி சாத்தியம்?

சரி இதையெல்லாம் ஒரு புறம் வைப்போம். உண்மையில் நாம் சுதந்திர காற்றை சுவாசிக்கிறோமா? உறங்கி எழுந்தால் ஏதோவொரு ஊரில் எமது கடை எரிந்தது என்ற செய்தி வருகிறது. நல்லிணக்கத்தை காப்பதற்காக எரித்தவனை விட்டுவிட்டு மின்னொழுக்கை காரணம் காட்டுகிறோம். எவ்வளவு அடித்தாலும் அழாமல் அந்த நல்லிணக்கத்தை மெயின்டெயின் பண்ணுகிறோம்.

**நஸீம் ஹிக்மத்**

நமது காலடிபடும் கற்களுக்கெல்லாம் புனிதத்தன்மை வந்துவிடுகிறது. அதற்கு நன்றிக்கடனாக விளக்கமறியல், தடுத்து வைப்பு, விசாரணை.



கொழும்பை அண்டிய கிரிபத்கொடையில் ஒரு முஸ்லிம் கூட கடை திறக்க முடியாத அளவு எமக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. மீறி திறந்தால் மின்சாரத்துக்கே பொறுக்க முடியாமல் போய்விடும்.

முற்றும் துறந்ததாக கூறிக்கொள்கிறவர்கள் நமது பெண்கள் திறந்து காட்டி ஆடை அணிய வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறார்கள். எமது விருப்பப்படி ஆடை அணியும் சுதந்திரம் சூறையாடப்படுகிறது.

அரச துறை வேலைவாய்ப்புகள் எமது விகிதாசாரத்திற்கு ஏற்ப தரப்படுகிறதா? மூன்று பிள்ளைகளுக்கு மேல் பெறும் எமது தாய்மார்கள் அரச ஆஸ்பத்திரிகளில் நடத்தப்படும் விதம் சுதந்திரத்தின் அடையாளமா?

எமது மக்களின் குரல்வளை நெரிக்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு உணர்வுகள் காயப்படுத்தப்பட்டு வரும் நிலையில் சுதந்திரத்தை கொண்டாட சொல்வது என்ன நியாயம்?

நமக்கான சுதந்திரம்தான் இப்படி இருக்கிறது. நாட்டில் உள்ள ஏனையோரின் சுதந்திரம்...? இந்தியாவைப் போல் இரத்தம் சிந்திப் போராடிப் பெற்றதல்ல நமது சுதந்திரம். வெள்ளைக்காரன் சப்பாத்தையே கழற்றி எறிந்து சென்றபோது காலில் இருந்த சொக்ஸ் என்ன ஹெயாருக்கு என்று வீசிச் சென்றானாம். ( சப்பாத்து இந்தியா. சொக்ஸ் இலங்கை).

பிரிட்டன் எம் நாட்டை எம்மிடம் கையளித்தபோது அந்நிய செலாவணி சாதகமான நிலுவையாக இருந்தது. திறைசேரி நிரம்பி இருந்தது. இறக்குமதியைவிட ஏற்றுமதியால் கிடைத்த வருவாய் அதிகம். வெள்ளைக்காரன் சுரண்டி சுருட்டினாலும் நாட்டின் மீது கடன் பளுவை சுமத்திச் செல்லவில்லை. சொந்தக் காலில் நிற்குமளவுக்கு எம்மை தயார்படுத்தியே சென்றான்.

அவனது தேவைக்காக அமைத்தாலும் நாட்டிற்கு வீதிகள், பாலங்கள், விமான நிலையம், ரயில் பாதை, துறைமுகம் உள்ளிட்ட முக்கியமான உட்கட்டமைப்புக்கள் கிடைத்தன. சுகாதார, மருத்துவ வசதிகள் வளர்ச்சியுற்றன.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## குறுக்கெழுத்துப் போட்டி

சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலிகள்

இதழ்:-14 இல:01
01. த.குலசேகரம் (மட்டிக்களி)
02. க.புண்ணியநேசன் (காரைதீவு-05)
03. சி.பாலசுப்ரமணியம் (சின்ன உப்போடை)

இதழ்:-15 இல:02
01. ஆர். துஸ்யந்தி (றொசைறோ லேன்)
02. க.புண்ணியநேசன் (காரைதீவு-05)
03. ஆ. பிறஸ்ரீடா (முனைத் தெரு

இதழ்:-16 இல:03
01. த.குலசேகரம் (மட்டிக்களி)
02. தவநாயகி ஸ்ரீகிரு'ணராஜா (செல்வநாயகம் வீதி)
03. எஸ்.கோணேசப்பிள்ளை (பார் வீதி)

இதழ்:-17 இல:04
01. துசரிகா (ஜெயந்தி புரம் மட்டக்களப்பு)
02. எஸ்.கரிகாலன் (குருமன் காடு வவுனியா)
03. க.புண்ணிய நேசன் (காரைதீவு)

இதழ்:-18 இல:05
01. திருமதி. ஜெ.செல்வசாச்சியார் (திருகோணமலை)
02. அ.ஆன்மரி (இருதயபுரம்)
03. க.ஜெபரெட்னம் (திருகோணமலை)

இதழ்:-21 இல:06
01. நிர்மலாதேவி புண்ணியநேசன் (காரைதீவு)
02. பொ.செபமாலை (அமிர்தகளி)
03. எஸ்.பிரணவி (திசைவீரசிங்கம் வீதி)

இதழ்:-22 இல:07
01. யோசப் டொரிங்டன' ஸ்பெக் (மட்டக்களப்பு)
02. ப.பேரின்பராஜா (திருமலை வீதி)
03. லோ.விப்ராகரன் (திருமலை வீதி)

இதழ்:-24 இல:08
01. நிர்மலாதேவி புண்ணியநேசன் (காரைதீவு)
02. தவநாயகி ஸ்ரீகிரு'ணராஜா (செல்வநாயகம் வீதி)

இதழ்:-28 இல:09
மகேஸ்வரி இராஜேந்திரன் (காரைதீவு - 01)

இதழ்:-30 இல:10
01. அ.செபமாலை (கோட்டமுனை)
02. சாஹிரா பானு லியாவுதீன் (புத்தளம்)
03. வேல்நாயகம் இராஜேந்திரன் (காரைதீவு

## ஓவியப்போட்டி பரிசு பெறும் அதிஸ்டசாலிகள்

வசந்தமோகன் கம்சன்- 54A மாமாங்கம் கோயில் வீதிஇ அமிர்தகழி

சசிக்குமார் தருப்சன்- பூபாலப்பிள்ளை வீதி, செல்வாநகர்இ ஆரையம்பதி.

ஜனிஸ்கா புஸ்பராகவன்- BT/Vincent girls high school

Name : K. Vipushantha Kaanthan
Age : 12
School : Bt/ St Micahel's College Batticaloa
Address : 11, Mamangam kovil Road,
Batticaloa.

பெயர் :- சசிக்குமார் தருப்ஷன்
வகுப்பு :- தரம் 4 வயது :- 09
பாடசாலை :- மட்/ ஆரையம்பதி இ. கி. மி. மகா வித்தியாலம்
விலாசம் :- பூபாலபிள்ளை,செல்வாநகர், ஆரையம்பதி

பெயர் : பு. மிதுஸ்
பிறந்த திகதி : 2003.01.21
பாடசாலை : மட் / புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை
விலாசம் : 47, மேல்மாடித் தெரு, மட்டக்களப்பு.

பெயர் : ஜனிஷ்கா புஷ்பராகவன்
பிறந்த திகதி : 01.06.2010
பாடசாலை : மட் / வின்சன்ற் மகளிர் உயர் தர தேசிய பாடசாலை

பெயர் : வசந்த மோகன் கம்சன்
பிறந்த திகதி : 2007.10.01
பாடசாலை : மட்/ புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை
விலாசம் : 54 - A , மாமாங்கம் கோயில் வீதி, அமிர்தகழி, மட்டக்களப்பு

## மட்டக்களப்பு அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர்ர்மகா வித்தியாலயத்தில் அரங்கம் நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு.

கணேசமூர்த்தி திலக்ஷனா
சிவநேசராஜா டிலக்ஷன்
யோகராஜா தினுப்பிரியா
சுவேஸ்கரன் தஸ்மன்
தேவய்யா ரென்சியா
இராசையா தீபன்
எல்விஸ் செல்சியா
புவனேந்திரன் சஞ்சியா
செல்வச்சந்திரன் மியூரி
தமிழ்கணேசன் சுரக்ஷனா

அரங்கம் தொடர்பு : 071 409 470 7
arangamnews@gmail.com

விளம்பரம்

வளவு விற்பனைக்கு

செங்கலடி போதகர் வீதி, பழைய ஊர் சந்தியில், வலது பக்கத்தில் வீட்டுடன் உள்ள 34 பேர்ச்சஸ் வளவு விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு : 0767793747

க. சிறீபஞ்சாட்சரம்
இல. 18, புனித மைக்கல் வீதி,
மட்டக்களப்பு

தொடர்ச்சி...

## சடங்கிசை- சிலம்பிசையும் பறையிசையும் உடுக்கிசையும். அம்மனைக்காய் இசையும்

பின்னுக்குச் செல்வார். அதன் பின் மீண்டும் சேவலை நெருங்குவார் பின் பின் செல்வார். இப்படிச் சில போக்குகள் காட்டிய பின் ஒரு கட்டத்தில் கோழியைப் படார் எனப் பறித்து ஒரு கையால் அதன் தலையையும் மறுகையால் அதன் அதன் இரு கால்களையும் நீட்டிப் பிடித்தபடி பலிகொள்ளப்போகும் அதனை உற்று உற்றுப் பார்த்தபடி ஆடி ஒரு கட்டத்தில் அச்சேவலின் கழுத்தை தன் வாயினாற் கடித்தபடி ஆட்டத்தின் தன்மையை மாற்றுவார்.

தேகிடு திந்தத் தேகிடு கிடு கிடு தேகிடு

தேகிடு திந்தத் தேகிடு கிடு கிடு தேகிடு

என்ற சொற்கட்டுகள் தவிலில் ஒருவரால் வாசிக்கப்பட அதற்குத்தக கால்களை மாறி மாறி வைத்துக் வாயிற் கௌவிய சேவலுடன் கோயிலைச் சுற்றி ஆடிச் செல்வார்.இத்தவில் வாசிப்பவர் ஆடிசெல்பவரைப் பின் தொடர்ந்து அவர் ஆட்டத்திற்குத்தக பறை வாசித்தபடி பின் தொடர்வார். மக்கள் பின் தொடரமாட்டார். சேவற்பலிகொண்ட தெய்வக்காரர் கோவிலைச் சுற்றி ஆடி பலிகொண்ட பழைய இடத்திற்கு வரும்வரை அமைதியாக அவர் வரவு நோக்கிக் மக்கள் காத்திருப்பர்.

ஒரு வகையான உணர்வு நிலை அங்கு நிலவும்.

மயான அமைதி கோவில் வெளியை நிறைந்திருக்கும். அமைதியைக் கிழித்துக்கொண்டு பறை ஒலி மாத்திரம் கேட்டபடி இருக்கும் ஆடிவரும் தெய்வக்காரரின் சிலம்பொலி இணைந்திசைத்தபடி இருக்கும்கோயிலைச் சுற்றி ஆடி வந்த அவர் முன்னர் தான் பலி எடுத்த இடத்திற்கு மீண்டும் வந்ததும் இறந்த சேவலை எறிந்து விடுவார். தயாராக மஞ்சள் தண்ணீர் நிரம்பிய குடங்களுடன் நிற்கும் ஊழியர்கள் அவர் மீது குடம் குடமாகத் தண்ணீர் ஊற்றுவர். தண்ணீரை நன்றாக அனுபவிக்கும் தெய்வக்காரர் தலையினை உசுப்பி தண்ணிரைப்போக்கிய பின் மீண்டும் கோயிலின் மூல ஸ்தானத்திற்குச் சென்று விடுவார். தான் பலி கொண்ட முறையை திருப்தியை அவர் சென்று மூல ஸ்தானத்தில் சிலை வடிவிலமர்ந்திருக்கும் நரசிங்க வைரவருக்கு உரைக்க வேண்டுமாம்.

சுற்றியிருந்த மக்கள் அமைதியுடன் பார்த்திருக்க பூசகரும், தெய்வக்காரனும் பாத்திரம் தாங்க தவில்காரன் பின்னால் அடித்துக் கொண்டு செல்ல கோயில் வெளியே அரங்காகக் கொண்டு நடைபெறும் இப்பெரும் காட்சியைப் பார்க்கையில் பிற மதக்காரர் ஒருவருக்கு புராதன நாடகம் பார்க்கும் நினைவே எழும்.

( தொடரும்)

தொடர்ச்சி...

## சுதந்திரம்

சுதந்திரத்திற்குப் பின் இத்தனை காலமாகியும் ரயில் பாதை ஒரு மில்லி மீட்டராவது நீட்டப்படவில்லை. நமது ஆட்சியாளர்களால் கட்டப்பட்ட துறைமுகத்தின் லட்சணம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அந்நிய செலாவணி தாவணி நழுவிய பெண்ணாக கூனிக் குறுகிப் போயுள்ளது. லிஃப்டில் சென்றால்கூட ரூபாயால் நெருங்க முடியாத நிலையில் உள்ளது டொலர். வெளிநாட்டுக் கடன்கள் தலையின் மீது ஏற்றப்பட்ட மலையாக இருக்கிறது. நாம் மட்டுமல்ல இனிவரும் பல தலைமுறைகளும் இந்த பாரத்தை சுமந்தே ஆக வேண்டும்.

இந்த கடன்களால் மெல்ல மெல்ல சீனர்களின் கொத்தடிமைகளாக மாறி வருகிறோம். அங்கோலா அடைந்த அலங்கோலம் இலங்கைக்கு ஏற்படுவதற்கு வெகுநாட்களாகாது. சுதந்திரத்தை கொண்டாடுவதாகக் கூறிக்கொண்டு அதனை உண்மையில் அடகு வைத்து வருகிறோம். வீதிக் கட்டமைப்புகள் விரிவடைந்து அபிவிருத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக பீத்திக்கொண்டாலும் பொருளாதாரம் வளரவில்லை. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் சாமான்யர்களின் விழி பிதுங்குவதே இதற்கு சாட்சி. சுதந்திரத்தை கொண்டாடுமளவு இங்கு மக்கள் அதனால் பலன் பெறவில்லை. தந்திரம் மிக்க ஒரு கூட்டத்திற்கே சுதந்திரம் சுந்தரமாக இருக்கிறது. மற்றும்படி சனமோ அந்தரப்படுகிறது. ஊழல், மோசடி அற்ற ஆட்சியும் சாமான்யர்களின் வாழ்க்கைத்தர உயர்வும் சட்டப் பாதுகாப்பும் உண்மையாக ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் பாரபட்சமின்றி கிடைக்கும்போதே சுதந்திரம் என்ற சொல்லுக்கு அர்த்தம் உண்டு.

தொடர்ச்சி...

## அசைகிறது மரங்கள் ''அரங்கம்'' எனும் காற்றால்

நடத்துகிறது. ஊர்கள் தோறும் சென்று பிரச்சனைகளை அறிகிறது.

அரங்கத்தில் எனக்குப் பிடிதவற்றுள் ஒன்று அதன் நிதானம்.

மொத்தத்தில் மட்டக்களப்பில் வாசிப்போர், கேட்போர், பார்ப்போர் மனதில் ஒரு அசைவை ஏற்படுத்துகிறது அரங்கம்.

காற்று வீசத்தொடங்கினால் அசையாத மரங்களும் அசையத் தொடங்கும். அரங்கம் எனும் காற்று வீச ஆரம்பித்துவிட்டது.

அரங்கத்தின் 50 இதழ்கள் வந்து விட்டனவா? இதன் முதல் இதழை வெளியிட்டு உரையாற்றியமை நேற்றுப்போல இருக்கிறது

வசதிகளைத் துறந்து பிறந்தகத்தில் ஏதேனும் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் இங்கு வந்த சீவகனையும் அவரது உள்நின்றியக்கும் சக்தியான அவரது மனைவியையும் அவருக்குத் துணையாக இருக்கும் இளைஞர் குழுவையும் மனமார வாழ்த்துவோம். அவர்கள் அயராத உழைப்பினை நாம் அறிவோம்.

உழைப்பில் வாரா உயர்வுகள் உண்டோ?

பார்த்துக்கொண்டிருக்க 100 ஆவது இதழும் வந்து விடும். அதற்குள் மட்டக்களப்பு சம்பந்தமான பலவிடயங்கள் பேசப்பட்டும் இருக்கும்.

தொடர்ச்சி...

## 'மட்டக்களப்பு தனியார் கல்வி நிலைய வசதிகள் குறித்து பெற்றோரும் அக்கறை காட்ட வேண்டும்'

காலத்துக்குள் தமக்கு சுட்டிக்காடப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யாது தமது செயற்பாடுகளை மேற்கொண்டால் மாநகர சபையின் கட்டளை சட்டத்திற்கு அமைய குறித்த தனியார் கல்வி நிலையங்களின் அனுமதி ரத்தாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

தனியார் கல்விக்கூடங்களில் இருக்கக்கூடிய வசதிகள், பாதுகாப்புக்கள் மற்றும் சுகாதாரம் குறித்து மாணவர்களின் பெற்றோரும் அக்கறையற்றுக் காணப்படுவதாகவும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

எந்தவிதமான வசதிகளும் அற்ற தகரக் கொட்டகைகளில் பல இடங்களில் பிள்ளைகள் ஆடு, மாடுகள் போல அடைக்கப்படுவது குறித்து பெற்றோரும் அக்கறை இல்லாது இருப்பது குறித்து பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

உண்மையில் அங்கு தமது மாணவர்களுக்கு கிடைக்கக்கூடிய வசதிகள் பற்றி பெற்றோர் அக்கறை காட்ட வேண்டும் என்றும் குரல்கள் எழுந்துள்ளன.

இச் சோதனை நடவடிக்கையில் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர ஆணையாளர் கே. சித்திரவேல், மாநகர பொதுச்சுகாதார பரிசோதகர்கள், மாநகர சபையின் சுகாதார நிலையியல் குழுவின் தலைவர் இரா.அசோக், மாநகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி...

## பிரச்சினைகளுக்கு தற்கொலை ஒரு தீர்வல்ல

உந்துதலாக இருக்கும். சிலர் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தில் இருக்கக் கூடும் அந்த இறுதி நிமிடத்தில் உங்கள் நட்பு அவர்களின் உயிரை காப்பாற்றக் கூடும்.

கிராமங்களில் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் மாதர் சங்கம் போன்ற அமைப்புகள் மக்களிடையே தற்கொலை சம்மந்தமான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்த வேண்டும். பிரச்சினைகளை கையாளும் வழிகள் பற்றி பேச வேண்டும்.
பாடசாலைகளில் மாணவர்களிடையே விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்த வேண்டும்.
பரீட்சை தோல்விகள் மற்றும் காதல் பிரச்சினைகள் பற்றி மாணவர்களுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்க வேண்டும். இவைகளுக்கு தீர்வு தற்கொலை அல்ல என்பதை மாணவர்களிடையே தெளிவுபடுத்த வேண்டும்.
அத்துடன் மாணவர்களின் வாழ்க்கையில் ஆசிரியர்களின் பங்கு அதிகம் ஆகவே ஆசிரியர்கள் பரீட்சையில் பின்னடைவை நோக்கும் மாணவர்களுக்கு சாதகமான அறிவுரைகளை வழங்க வேண்டும். மாணவர்களை ஒருவருடன் இன்னொருவரை ஒப்பிட்டு பேசுவதை தவிர்க்க வேண்டும். நான் எல்லா ஆசிரியர்களையும் குறிப்பிடவில்லை. ஒரு சில ஆசிரியர்களின் இது போன்ற பொறுப்பற்ற செயல்களால் சில மாணவர்கள் தற்கொலை செய்து கொண்ட செய்திகளை நாம் கேள்விப்பட்டு தானே இருக்கின்றோம்.

தற்கொலை சம்மந்தமாக அதிகம் பேசாதீர்கள். தற்கொலை செய்து கொண்டவர்களுக்காக அனுதாபப்படாதீர்கள் அது இன்னொரு தற்கொலைக்கு தூண்டுகோலாக இருக்கும். தற்கொலை செய்து கொண்டவர்கள் அனுதாபத்திற்கு உரியவர்கள் அல்ல தூற்றப்பட வேண்டியவர்கள் என்பதை வெளிப்படுத்துங்கள். அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளில் தற்கொலை சம்பவங்கள் நிகழ்கின்றன. ஆனால் அங்கு ஊடகங்கள் அதை ஒரு முக்கிய செய்தியாக வெளியிடுவதில்லை. ஏனென்றால் அந்த செய்தி இன்னொரு தற்கொலைக்கு தூண்டுகோலாகி விடும் என்பதால்.
நம்முடைய நாட்டிலும் ஊடகங்கள் இதை பற்றி கருத்தில் கொள்வது நல்லது.
தற்கொலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி விலைமதிப்பற்ற மனித உயிரை காப்பாற்ற வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

தொடர்ச்சி...

## சங்கீத பூஷணம் திரு. நல்லதம்பி கணபதிப்பிள்ளை நினைவுகள்...

கல்லடியில் உள்ள இராமகிருஸ்ண மிசனுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருந்த இவர் கிரமங்களில் உள்ள மக்களுக்கு சைவசித்தாந்தத்தினை இலகுவான முறையில் பாமர மக்களும் அறிவதற்காக கடின முயற்சிகளை எடுத்திருந்தார். மிகமுக்கியமாக மிஷனில் உள்ள துறவிகளை அ்ழைத்து கிராமங்கள் தோறும் சைவசித்தாந்த சொற்பொழிவுகளை நடாத்தி புரிய வைத்தார்.

இக்காலங்களில் இவரால் புரியப்பட்ட சேவைகளில் முக்கியமாக ஓர் இந்துவானவனை அடையாளப்படுத்தும் 'தீட்சை' எனும் சைவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கும் தீட்சை வழங்கும் நிகழ்வுகளை குருவான துறவிகளின் முழுப்பங்குடன் நடாத்தப்பட்டது.

இவ்வாறாக தான் வாழ்ந்த காலங்களில் இசைக்காகவும் சமூகத்திற்காகவும் சமய விழுமியங்களுக்காகவும் அரும்பாடு பட்ட இந்த மனிதனின் ஆழுமைகள் காலங்கடந்து வாழக்கூடியவை.

AGNI Pulayavely

அக்கினி உணவு தயாரிப்புக்கள்

சுவையான மரவள்ளி பொரியல் சுவையான மிக்சர்
புலையவெளி கிராமத்து மிளகாய்த்தூள், கறிவேப்பிலைத்தூள்
என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்
கொள்ள உடன் முன்கூட்டி பதிவை மேற்கொள்ளுங்கள்

இடம் : புலையவெளி கிராமம், பதுளை வீதி,
செங்கலடி, மட்டக்களப்பு

அன்னை ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயத்திற்கு முன்பாக

E-mail:- agnip8367@gmail.com

தொலைபேசி இலக்கம்

0771516203 0757876853

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

உங்களின் வாழ்வை மேம்படுத்த நான்கு இறக்கைகள்...

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life

PHARMACY – TIP TOP +HEALTH CARE+
SUPER MARKET – FOURAMS CITY CENTRE
BUDGET SHOP – FOURAMS CASH & CARRY – Young Forever to wow you
CAFETERIA – FCC Cafe

ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியாவசிய பொருட் தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்.

இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு. TP: 0652222722, Hotline: 0772072722

Now Available Gift Vouchers

We Respect Our Customers
எமது வாடிக்கையாளர்களை நாங்கள் கௌரவிக்கிறோம்

*Conditions Apply

- புதியன புகுத்தி
- முதுசம்களை முதன்மைப்படுத்தி
- தற்துணிவுடன் தனித்துவமாக
- இங்கிதம் இனிக்க
- இனங்களெல்லாம் இணைய
- மட்டக்களப்பு மணம்கமழ
- சீவகனின் சீமையில்
- அச்சமின்றி அச்சிடப்படும்
- அரங்கத்தை அன்புடன்
- வானுயர வாழ்த்துகிறோம்!!

Visit us:
www.fourams.com